திராவிடநாடு

4—8—57 | வார வெளியீடு | விலை 0—2—6

நாடு மதிக்குமே நன்கு!

—[கருணாநந்தம்]—

ஆண்டாண்டு காலம் அடிமைப் படுகுழியைத்
தாண்டாமல் நின்று தவித்த சமுதாயம்
இந்தத் தலைமுறையில் ஏற்றம் பெறுமாறு—
சொந்த நலன்கள், சுகவாழ்வுச் சாதனங்கள்
யாவும் துறந்து, எழில் குடும்பம் தான்மறந்து,
ஓய்வும் உணவும் உறக்கமும் கைவிட்டுச்,
சீமான்கள் சீற்றம் சிறுமதியோர் ஏளனமும்,
சாமான்யர் உண்மை உணராத தன்மைகளும்.
கோலேந்தி நிற்கும் குணக்கேடர் ஆணவமும்,
தாளேந்தி வாழும் தறுதலைகள் கேலிகளும்
ஓங்கி வளர உதவும் எருவாகத்
தாங்கிக், கிளைத்து தரணி வியந்திடக்
கண்ணியம் போற்றி, கடமை தவருது,
எண்ணத்தில், பேச்சில், எழுத்தில், உயிர்வாழ
ஈர்க்கின்ற மூச்சில், இடையருதீடுபட்டுப்
பார்க்குமிடமெங்குமொரு நீக்கமறச் சேர்ந்திருந்து
வாடும் தாயகத்தை வாழவைக்கும் தோழர் எம்மை
நாடு மதிக்குமே நன்கு!

அல்லி திருமணம்



சி. என். ஏ. பரிமளம்

திங்களுக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் தன்னலமற்றவர்களின் வழியில் வந்தவர்கள் —வானம் ஈன்றெடுத்த இரட்டையர்கள் —உலக இருள் போக்கும் **பகலவனும்**, காதலர் போற்றும் **மதியும்**; காதலர் கொஞ்சிப் பேசும் நேரத்தில் முளைப்பதாலோ என்னவோ மக்கள் திங்களைப் போற்றினர், பன்னெடுங் காலமாக.

இரவெல்லாம், உலகெங்கும் காதலர்களைக் காணும் மதிக்கு மட்டும் காதலி இல்லாமலா போவாள்! "அவளைக் காண்பதற்குத்தான் இவ்வளவு அவசரமாகக் கிளம்புகிறான்; சொந்த வேலை பாருங்கள்" என்று நட்சத்திரத் தோழர்கள் கேலி செய்வதையும் கவனியாமல் கிளம்பிவிட்டான், பவனி வர.

பருவப் பெண்ணை வீட்டில் தாய், தந்தையர் அடைத்து வைத்தபோதிலும், அவள் சாளரத்துத் திரையை நீக்கிவிட்டு, காதலனை தோட்டத்தில் தேடாமலா இருக்கிறாள்? அன்னையும், அக்காவும் தூங்கிவிட்டார்கள் எனத் தெரிந்ததும், காதலன் வருவதைக் கண்ட அல்லியாளின் இதழ் மலர்ந்தது; இதயமும் மலர்ந்தது. மகிழ்ச்சியால் தென்றல் தோழியாள் அல்லியின் அகத்தே உள்ள மணத்தை, காதலி காதலனுக்குத் தரும் முடங்கல்போல் எடுத்துச்சென்று தந்து, மகிழ்வித்து, விருது பெற்றுச் சென்றாள். "அத்தான், இன்னும் எத்தனை நாள் நாம் இப்படிப் பிரிந்து, ஒருவரை ஒருவர் பார்த்துப் பெருமூச்செறிந்து கொண்டிருப்பது? நீங்கள் ஒவ்வொரு நாளும் பார்க்கிறீர்கள் அல்லவா! எவ்வளவோ காதலர் உலகமெங்கும் கூடி மகிழ்வதைக் கண்டும், இப்படியிருக்கலாமா? நம் திருமணத்திற்கு சீக்கிரம் ஏற்பாடு செய்யுங்கள் அத்தான்"

கூறிமுடித்தாள் திணறியபடி. நாணம் அவள் தலையைக் கவிழ்த்து, அவளது அன்னையின் மடியில் புதைத்துவிட்டுச்சென்றது.

'அல்லி! எனக்கு மட்டும் ஆசை இல்லையா அல்லி? என் தாயார் வானத்தைக் கேட்பதற்கு எனக்கு வெட்கம். என் மாமன் முகில் இருக்கிறானே, அவன், அவனுடைய மகள் மழையை மணந்து கொள்ளச் சொல்லி மிரட்டுகிறான். நீயும் பார்த்திருப்பாய் என்று நினைக்கிறேன். சில சமயங்களில் நாம் பேசி மகிழ்வதைப் பார்த்துவிட்டால் போதும்; அப்பப்பா! அக்கொடியோன் உனக்கும் எனக்கும் நடுவில் நின்று, உன்னை மறைக்கிறானே. நான் இந்த நிலையில் இருக்கிறேன்."

"அத்தான் நம் திருமணத்தைப் பற்றி எனக்கொன்றும் அவ்வளவு அவசரம் இல்லை. காலை வேளையில் என் அக்காள் தாமரையும், உங்கள் அண்ணன் பகலவனும் கூடிப் பேசி, இன்புற்றிருப்பதைக் காணமல் கண்மூடியிருந்தாலும், மனம் சும்மா இருப்பதில்லை. காலை அரும்பி மாலை மலரும் நோய் என்னை வாட்டுகிறது."

காலம் கடந்ததே தெரியவில்லை. பகலவன் கிளம்புவதைப் பறை சாற்றுவது போல் சேவல் கூவிற்று.

அல்லிப் பெண் துன்பமுற்று புகை படிந்த ஓவியம்போல், வீற்றிருந்தாள்.

கரையில் அமைந்திருந்த முதுமை அடைந்த மரங்கள், "நீ அண்மையில், உன் துன்பம் நீங்கி இன்பம் பெறுவாய்" என்று வாழ்த்துவதுபோல் காற்றில் ஆடி, ஓசை எழுப்பின. அல்லியாள் பனித் துளிகளாகக் கண்ணீர் வடித்தாள்.

சந்திரன் தன் எண்ணத்தை அண்ணனிடம் சொல்லி, மாமனின் பிடிவாதத்தையும் கூறிவிட்டான்.

பகலவனுக்கு ஆத்திரம்பொங்கியது. "மாமா நீங்கள், என் தம்பியைமிரட்டினீர்களாம்உங்களுடைய மகள் மழையை மணந்து கொள்ளச் சொல்லி அவனை நீங்கள் மிரட்டலாம். ஆனால் நானும், என் நண்பன் **புயலும்** சேர்ந்தால் நீங்கள் தவிடுபொடி ஆவீர் என்பது திண்ணம். அத்துடன் உங்கள் மகள் ஓர் பரத்தை. காரணம், அவள் நிலத்தில் வீழ்ந்தவுடன், உலகில் உள்ள தாவரங்களுக்கு பேதமில்லாமல் தன்னையே தருகிறாள்; யாவருடனும் வாழ்கிறாள். இனிமேல் நீங்கள் அவளுடைய மணத்தைப்பற்றி எங்களிடம் பேசாதீர்" என்றான். தாயிடமும் சமமதம் பெற்றாகிவிட்டது.

அல்லி தன் அக்காவின் உதவியால் தன் அன்னையிடம் சம்மதம் கேட்க, அவளும் தந்துவிட்டாள் தடையின்றி.

அன்றிரவு, அல்லிக்கும் சந்திரனுக்கும் இனிய இரவில் இருவரும் சந்தித்தனர்.

"அழகுப் பெண்ணே! அல்லியாளே! என் தாயிடம் சமமதம் பெற்றுவிட்டேன் நம் திருமணத்திற்கு, இனி நாம் எவருக்கும் அஞ்சவேண்டாம்"

"அத்தான், நானும் என் அக்காளின் உதவியால் பெற்றுவிட்டேன் சம்மதம்" அல்லியாள் உண்மையைச் சொன்னாள்.

சந்திரன் தானே சம்மதம்பெற்றதாகப்புளுகினான்; தன்காதலியின் அன்பைப் பெறுவதற்காக, அதாவது அவன் ஆண்வர்க்கம் என்பதை நிரூபித்துவிட்டான்.

"அத்தான்! அத்தான்!! சீக்கிரமாகப் போங்கள் என் குறும்புக்காரத் தோழி என் அன்னையையும் அக்காளையும் எழுப்புகிறாள். அவர்கள் பார்த்தால் இவ்வளவு அவசரமா எனக் கேலி செய்வார்கள்"

(15-ம் பக்கம் பார்க்க)



காஞ்சீபுரம்

4—8—57

தம்பி !

கல்லணை! தமிழகம் தனிச் சிறப்புடன் விளங்கிய நாட்களை, இன்றும் நமக்கு நினைவூட்டும் சின்னமாகக் காட்சி அளிக்கிறது!

தமிழ் இனத்தின் வீரம் கண்டு சிங்களம் அடிபணிந்த வீரக் காதையும், போரிலே பிடிபட்ட சிங்களவர்களைச் சிறையிலிட்டுச் சீரழிக்காமல், சந்தைச் சதுக்கத்திலே நிற்கவைத்து. அடிமைகளாக விலை பேசி விற்றிடாமல், தமிழ் மன்னன், அவர்களைக்கொண்டு, நாட்டுக்குப் பயன்தரத்தக்கதும், என்றென்றும் நிலைத்து நிற்கத்தக்கதுமான 'அணை' கட்டவைத்த கருத்தாழம், கவினுற விளக்கிடச் செய்கிறது அந்தக் கல்லோவியம்!

வீரப் போரிட்டு வாகை சூடி, வேற்று நாட்டவர் வியந்திட, சொந்த நாட்டவர் போற்றிட, திரை பலர் தரப்பெற்று திருவோலக்கத்தில் அமர்ந்து எமக்கு இணை எவர் உளர்? என்று கேட்பது மட்டுமல்ல, தமிழ் நெறி; வீரம் காட்டினோம் வெற்றி பெற்றோம்; மாற்றார் தோற்றனர் மாப்புகழ் கண்டோம்; ஆயின் என்னை! மக்களின் நல்வாழ்வு, மன்னன் மார்பகத்திலே புரளும் வெற்றி மாலைகளின் ஒளியில் மட்டுமோ உளது; இல்லம் தோறும் ஒளியும் இதயமெல்லாம் இன்பமும் மலர்ந்திடத்தக்க விதத்திலே, வாழ்வு செம்மைப்படுத்திட வேண்டாமோ? எமது மன்னன் பிடித்த கோட்டைகள் ஆயிரம்; இடித்த அரண்கள் பலப்பல; தரைமட்டமாக்கிய நகர்கள் நூறுநூறு; கொன்று குவித்த மாற்றார்—பல குவியல்! கரியும் பரியும் கழுகுக்கு இரையாயின! நாடு, காடாயிற்று! போரிட்டுத் தோற்றவர் வெண் பொடி பூசி உருமாறி ஓடிப் பிழைத்தனர்!—என்று மக்கள் மகிழ்ந்து பேசுவது மட்டும், மன்னனின் மாண்பினை விளக்கிடுவதாக அமைந்திடாது! கொல்லும் புலியும், பேசிட இயலுமேல், வீரக்காப்பியம் கூறுமே! எனவே, வீரச் செயல்பல ஆற்றியதுடன், மன்னன், மக்களுக்கு ஆற்ற வேண்டிய அரும்பணி முடிவு பெற்றுவிடவில்லை! மக்கள், உறுபசிக்கு ஆளாகாதபடி தடுத்திட, அவர்தம் உழவுத் தொழில் சிறந்திட வழிவகை கண்டறிந்து அளித்திட வேண்டும்! நீர் உயர, நெல் உயரும்! எனவே, உழவரின் உள்ளத்தில் உவகை பொங்கவேண்டுமானால், வறண்ட இடங்களுக்கு, பொங்கிப் பெருகி, தங்கி நிற்க இடமில்லாததால் காட்டுப் போக்கிலே புரண்டு வீணாகி, வீணாகும் வெள்ளமும் வீழ் நீரும், தடுத்துத் தேக்கி வைக்கப்பட வேண்டும்—உழவுக்குப் பயன்பட வேண்டும் என்ற உன்னதமான நோக்கம்கொண்டு, தமிழகத்துத் தன்னிகரில்லா மன்னன், கட்டி முடித்த கருவூலம்!

இக்காலக் கட்டட விற்பன்னரும், கண்டு வியந்திடுகின்றனர்!

★ கல்லணை

உழவுக்கு உறுதுணை இத்தகைய அணைகள் என்ற உண்மைதனைக் கண்டறிய, ஏடு பல கற்றிடுவோரெல்லாம், கல்லணை காட்டிடும் 'பாடம்', கல்லூரிகள் பல வற்றினும் கிடைத்திடுவதைவிட, பொருளும் சுவையும் மிக்கது, என்று கூறிப் போற்றுகின்றனர்.

பொன்னி — அழகி! மக்களுக்கு நலன் அளிக்கும் நோக்குடன், நடைபோட்டு வருகிறாள்! குழவியை எடுத்து முத்தமிட்டுக் களிப்பிக்கும் அன்னைபோல, பொன்னி தன் அன்புக்கரத்தால் தொட்டு, பாலையையும் சோலையாக்கிப் பூரிக்கவைக்கிறாள்! வீரம் காட்ட தமிழ் மன்னர்கள் நாடு பல சென்றனர்; களம் பல புகுந்தனர்; நானோ, என் இதயத்திலே ஊற்றெடுக்கும் ஈரம் தன்னை, வறண்ட இடங்களெல்லாம் தந்து தவ, வளைந்தும் நெளிந்தும், வழி கண்டும் வழி கொண்டும் செல்கிறேன்; என் கண்முன் தெரியும் கரம்புகளைக் கரும்புத் தோட்டங்களாக்கி களிப்படைகிறேன்; என்னுடன் வாளையும் வராலும், கெண்டையும் ஆராவும், துள்ளித் துள்ளி விளையாடுகின்றன! என் வருகையால் வளம் காண்கின்றனர், மக்கள்; நான் உளம் பூரிக்கின்றேன்!'' — என்றெல்லாம் கூறிடும் பான்மை போல, சலசலவெனும் ஒலியுடன் சதங்கை அணிந்த மாது சதுராடுதல்போல் வரும், பொன்னி, பெற்றெடுத்த மக்கள் சிறு வீடுகட்டி விளையாடி மகிழ்வதைச் சற்றுத் தொலைவிலிருந்து கண்டு, பெருமிதத்துடன் வீற்றிருக்கும், நரை கண்டுத் திரை காணு நடுத்தர வயதினள் அமைதியாக அமர்ந்திருக்கும் காட்சி—கல்லணை. ஆடிப்பாடி ஓடியதும், அல்லி மலரினைக் கொய்ததும், ஐயோ! போ! போ! என்று அலறியதும், அன்னே! அங்கே! என்று அச்சம் காட்டியதும், அந்த நாளில்; இன்று அடலேறு என் ஆண்மகன், மின்னலிடையாள் என் செல்வி, அவள் மாலை தொடுக்கிறாள், அவன் கலம் விடுகிறான், என்று பெருமையுடன் பேசிடும் பெருமாட்டிப் பருவம் இன்று! கல்லணை — காவிரிப் பெண்ணாள், பெருமாட்டியானாள் என்பதனைக் காட்டி நிற்கிறது.

தமிழகம், அதுபோலெல்லாம் இருந்தது! தமிழகத்தில் வீரமும் அறிவும், திறனும், திருவும், செழித்து இருந்தன! எந்தத் துறையிலும்,பயன் காணும் வகையிலே செயல்பட்டனர்; எந்தச் செயலும் சீரியதாக இருக்கும் வண்ணம், சிந்தனை துணை நின்றது!

கல்லணையைக் கட்டிடுமுன்னம், மன்னன், எத்தனை எத்தனை நாட்கள், நினைவிலே திட்டமிட்டிருந்தானோ—கூறவல்லார் யார்? கல்லணை அந்த மாமன்னனின் செயல்படு திறன்பற்றி மட்டும்தான், கவி பாடி நிற்கிறது—கருவில் உருவாகிய கருத்து, எப்படியெப்படி வளர்ந்தது என்பது, தெரியவில்லை. "என்னைப் பெற்றெடுக்க என் அன்னை பட்ட கஷ்டம்,சொல்லுந் தரத்ததன்று" - என்று கூறிடக் குழந்தையால் இயலுமா? கல்லணையும், அதனால்தான், அது குறித்து ஏதும் கூறுமலிருக்கிறது!

கல்லணையைக் கண்டு மன்னனை நம்மாலே காண முடிகிறது!

இங்கு, வீணுகும் பெருவெள்ளம் கட்டுப்படுத்தப்பட்டால், கழனிகளில் வாளை துள்ளும், கதிரொரு முழமே காணும், கமலத்தில் அன்னம் துஞ்சும், கமுகும் தெங்கும் ஓங்கி வளரும், எங்கும் மணம் கமழும்—ஆனால்...! என்று மன்னன் எண்ணிப் பலநாள் ஏங்கி இருந்திருத்தல் வேண்டும்!

ஆறு ஒன்றுக்குக் கரையும் அணையும் அமைத்திடும் செயல், 'அந்தரத்துச் சுந்தரி' போல, திடீரென்று தோன்றமுடியும்!

நீரைத்தேக்கி வைக்கும் முறை, கரை உடையாதபடி பாதுகாத்திடும் வகை, இதற்காகும் உழைப்பு, அதனை நல்கிடத் தேவைப்படும் பெருந்திரளான மக்கள்—என்பன போன்ற பிரச்சினைகள், மன்னன் மனதைப் பல காலமாக வாட்டிக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

வீரப்போர் புரிந்த காலத்திலும் சரி, நிலா முற்றத்தில் உலவிய நேரங்களிலும் சரி, மன்னன் மனதிலே இந்த எண்ணம் குடைந்தபடி இருந்திருத்தல் வேண்டும்; எனவேதான், சிங்களவர்போரிலே பிடிபட்டபோது, நமது எண்ணம் ஈடேற, இவர்களைப் பயன்படுத்துவோம். களத்திலே பெற்ற வெற்றி, இனிக் கழனிகளுக்கு வளமளிக்கட்டும், என்று முடிவு செய்து, திட்டமிட்டு வெற்றி கண்டிருக்கிறான்,அக்கொற்றவன். எனவே கல்லணை, வெற்றியை விளக்கிடும் கோட்டமாக நிற்கிறது.

தமிழகத்தின் வீரமும் வளமும் விளக்கிக் காட்டிடும் கல்லணையில், இன்று உலவும்போது, அற்றை நாளில் இருந்துவந்த சிறப்புடன் இதுபோது வந்துற்ற அல்லலளிக்கும் நிலையை ஒப்பிட்டுப் பார்த்து உள்ளம் நொந்திடாது இருத்தல் முடியாது.

ஒரு சமயம், முடியுடை மன்னர் கட்டிய கல்லணையிலே இன்று, அரசோச்சும் அமைச்சராக விளங்கிடும் 'நாம்' உலவுகிறோம்!— என்று அமைச்சர் பெருமகனார் பெருமையை அணைத்துக்கொண்டிருக்கக்கூடும்—ஆனால் அவரே கூட, அந்த அணை அமைக்கப்பட்ட காலத்துத் தமிழகத்தை நினைவிற்குக் கொண்டுவந்தால், ஓரளவு வருத்தமே கொள்வார்.

வளம் குன்றி வருவாய் குறைந்து, வாழ்க்கை வசதியற்று வேற்று நாடுகளுக்குக் கூலிகளாகச் சென்று, இழிநிலையில் இடர்ப்படும் இன்றையத் தமிழரின் முன்னையோர், களத்தில் வாகை சூடினர், கல்லணை அமைத்து நாட்டை வளப்படுத்தினர். உள்ளத்தில், பெருமித உணர்ச்சியும் வேதனையும் பின்னிக் கொண்டல்லவா, குத்துகிறது.

கல்லணை — கரிகாலச் சோழனுடைய கருத்தில் உருவாகி, தமிழகத்துக் கட்டட அமைப்புத் திறனின் அரண் பெற்று, சிங்கள நாட்டு உழைப்புத் துணையுடன் உருவாயிற்று — 1080 அடி நீளமும் 40—60 அடி அகலமும், 15—18 அடி ஆழமும் கொண்டதாக அமைந்துள்ளது.

இதனைவிட அளவிற் பெரிய அதிசயமிக்க, விஞ்ஞான நுணுக்கத் திறமைகள் தெரியத்தக்க அணைகளும் தேக்கங்களும், இன்று பல உள—எனினும் கல்லணை, கட்டப்பட்ட காலத்தைக் கருத்திலே வைத்துப் பார்க்கும் போதுதான், அதன் சிறப்பு நன்கு விளங்குகிறது — எவரும் பாராட்டுகின்றனர்.

விஞ்ஞான அறிவு மிகவும் பரவியுள்ள இந்நாளிலேயும், இந்தத் துறை வித்பன்னர்கள், கல்லணையைக் கண்டு வியந்து பாராட்டுகின்றனர்.

(14-ம் பக்கம் பார்க்க)

அரசியலில் மாணவர்கள்!

21—7—57 ஞாயிறு அன்று சென்னை சர் தியாகராயர் கல்லூரி அரங்கில் நடைபெற்ற மாணவர் மன்ற வெள்ளி விழாவில் **சி. என். ஏ.** பேசியபோது, மாணவர்களிடம் தோன்றியுள்ள மறுமலச்சி குறித்துத் தமது பாராட்டுதலைத் தெரிவித்து, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே சிறந்த அறநூலை வள்ளுவப் பெருந்தகை அளித்த மாண்பினை நினைவூட்டினார்.

மாணவர்களுக்கு, அளிக்கப்பட்டுவரும் அறிவுரைகளை அலசிக் காட்டி, எவரெவர் என்னென்ன நோக்குடன் அறிவுரைகளை வழங்குகிறார்கள் என்பதுபற்றி, மாணவர்கள் விழிப்புணர்ச்சியுடன் இருத்தல் வேண்டும் என்பதனை வலியுறுத்தினார்.

எந்தப் பண்புக்கும். குறிக்கோளுக்கும் நான் தனியானபொருளைக் கொள்வதில்லை அதனை ஆங்கிலத்திலே சொல்வதானால் எந்த வார்த்தைக்கும் (அப்சொல்யூட்) நிலைத்த—தீர்மானித்த-பொருள் அதற்கே உள்ள பொருள் என்று நான் கொள்ளுவதில்லை—எதற்கும் அது எதனோடு தொடர்புபடுத்தப்படுகிறதோ —(ரெலடிவ்) — அதைக்கொண்டுதான் பொருள் தருவதும்—அதைக் கையாள்வதும் பழக்கமாக இருக்கிறது. ஏன் என்றால் தமிழர்களுக்குமட்டும் அல்ல—உலகத்திலே உள்ள நல்லறிவு படைத்த எந்த இனத்தாருக்கும் சிலபல பொதுக் கருத்துக்கள் நீண்ட பல காலமாக தரப்பட்டு வந்திருக்கின்றன. அழகு,வாய்மை அறிவுடைமை,பொறுமை, இப்படி இருக்கிற பண்புகள் அத்தனையும் எல்லா நாடுகளிலேயும்—கிரேக்க நாட்டிலே சாக்ரடீஸ் காலமானாலும் சரி—தமிழகத்திலே வள்ளுவப் பெருந்தகை காலமானாலும் சரி—எந்த நாட்டிலே பிறந்த பேரறிவாளர் காலமானாலும் சரி--சில பொதுக் கருத்துக்கள் தரப்பட்டு வந்தன. அவைகளுக்குக் கால மாறுதலுக்கு ஏற்றபடியும், உலகத்தின் சூழ்நிலைக்கு ஏற்றபடியும் அது எதனுடன்தொடர்பு படுத்தப் படுகிறதோ. அதைப் பொறுத்தும் அதற்கு முழுப் பொருளைக் கண்டுபிடிக்க முடிகின்றது.

அப்படிக் கண்டுபிடிக்கக் கண்டுபிடிக்கத்தான் அதன் உள்ளே புதைந்து கிடக்கின்ற முழு உண்மைகள் தெரியப்படக்கிடைக்கும்.

தமிழ் மக்கள் தங்களுக்கென இருக்கிற சிறந்த பண்புகளை இன்றைய தினம் அறிந்து அவைகளைத் தங்களுக்கு உரியது ஆக்கிக்கொண்டு அதிலே பயிற்சி பெறுவதற்கு மிகச் சிறந்த முறையிலே முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். எவ்வளவுதான் தமிழர்கள் அழுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் எத்தனை துறைகளிலேதான் அவர்கள் பின் தள்ளப்பட்டிருந்தாலும், இந்தப் பதினைந்து, இருபதாண்டுக் காலத்தில் இருபதாண்டு காலத்திலே என்று சொல்லுவதைவிட எனக்கு இப்புறத்திலே இருக்கிற நண்பர் கி. அ. பெ. வும இந்தப் பக்கத்திலே இருக்கிற சாமி அருணகிரிநாதரும், காவி அணிந்த அந்தத் தமிழ்க்காவலரும் வெள்ளை ஆடை அணிந்த நம்முடைய வித்தகரும், என்போன்றவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து அழைத்துக் கொண்டு தமிழ் நாட்டிலே உலா வந்து, தமிழர்களுக்கு வந்துற்ற குறைபாடுகளை எல்லாம் நீக்க வேண்டும் என்று வீர உணர்ச்சியோடு போராடிய நாள் தொட்டு, நாளுக்கு நாள் தமிழார்வம் நல்ல முறையிலே பரவி வருகிறது. எத்தனை தமிழ்ப் பகைவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டாலும், தமிழ்ப் பகைவர்கள் தங்கள் கரங்களிலே கிடைக்கிற எத்தனைபடைகளைக்கொண்டு அழித்து ஒழிக்க முயன்றாலும், இப்பொழுது ஏற்பட்டிருக்கிற கட்டம் தமிழர்களுடைய பகைவர்கள் தங்களையும் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்ளுவதற்குத் தயக்கமடையாமல் "எங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கேட்டுக்கொள்ளுகின்ற அந்தக் காலக் கட்டத்தில் இன்றைய தினம் தமிழர்கள் வந்து நிற்கின்றோம்—நாம். இந்த அளவுக்கு விரைவில் வளருவோம் என்று—காசி விசுவநாதர் ஆலயத்திற்கு முன்னாலே இருந்து நானைகந்து காளையரும், இரண்டொரு கன்னிமாரும, பத்துப் பதினைந்து தாய்மார்கள் வாழ்த்துக்கள் கூற, பெரியவர்கள் கதவோரத்திலே நின்று "ஐயோ, பிள்ளைகள் அடிபடுவார்களோ" என்று ஆயாசப்பட, போலீஸ் காரர்கள் இந்தத் தொல்லை நித்த

நாளுக்கு நாள் பரவிவரும் தமிழார்வம்

நித்தமுமா என்று சலித்துக் கொள்ள ஊர்வலம் வந்தோமே, அந்த நாட்களிலே இவ்வளவு விரைவிலே முன்னேறுவோம் என்று எண்ணிப் பார்த்ததில்லை. மாணவர் மன்றம் மட்டும் அல்ல—தமிழர்கள் மனம் கூட இந்த அளவுக்கு விரிவடையும் என்று நாங்கள் எண்ணியது இல்லை. ஆனால் இன்றைய தினம் என்ன பார்க்கிறோம்? நான் இன்றைய தினம் இடம் பெற்றிருக்கிற சட்ட சபையில் நாளுக்கு நாள் உறுப்பினர் ஒருவர் தவறாமல் திருக்குறளை — தெரிந்து சில பேரும் — தெரியாமல் பல பேரும் —தெரியும் என்பதைக் காட்டிக் கொள்வதற்காகச் சில பேரும் — தெரிந்தால்தான் தமிழர்கள் என்று ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று பலபேரும் நித்த நித்தம் எடுத்துச் சொல்வதைக் கேட்கிறோம்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாலே பத்து ஆண்டுகளுக்கு முன்னாலே சட்ட மன்றத்திலே யாராவது ஒருவர் மேதை என்று தன்னை விளக்கிக்கொள்ள வேண்டும் என்றால் ஆப்ரகாம் லிங்கன் அப்படிச் சொன்னான், வாஷிங்டன் இப்படிச் சொன்னான், சர்ச்சில் பெருமகன் அப்படிச் சொன்னான், லாயிட் ஜார்ஜ் இப்படிப் பேசினார் என்றால்தான் ஆள் காட்டி விரலை மூக்கின் மீது வைத்து 'ஆகா இவனல்லவா அறிஞன்' லாயிட் ஜார்ஜை கவனப்படுத்துகின்றான், வாஷிங்டனை எடுத்துக் காட்டுகின்றான் ஆப்ரகாம் லிங்கனைத் துணைக்கழைக்கின்றான் என்று இவர்களைப்பற்றி முற்றும் உணராத காரணத்தாலே இப்படிப்பட்ட விஷயங்களையெல்லாம் குறைபடக் கூறினாலும், ஏற்றுக்கொள்ளத் தலைப்பட்டார்கள்; பாராட்டினார்கள்; ஆச்சரியப்பட்டார்கள். இன்றைய தினம் அவர்கள் எல்லாம் அல்ல சட்டமன்றத்திலே துணைக்கழைக்கப்படுகின்றவர்கள்—சட்டமன்றத்திலே பேசப்படுகின்ற நேரத்தில், சங்க நூற்கள் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன, பழந்தமிழ் முறைகள் எல்லாம் அலசப்படுகின்றன, கோனாட்சியிலே இருந்தாலும் குடியாட்சியைத் தழுவினான் மன்னன் என்பது காட்டப்படுகிறது, வள்ளுவப் பெருந்தகையினுடைய திருக்குறள் எடுத்துக் கையாளப்படுகிறது. இவைகள் மட்டுமல்ல நம்முடைய மாநிலத்தின் நிதியமைச்சர், தம்முடையவரவுசெலவு திட்டத்தைத் தமிழிலே படித்துவிட்டு, அதற்காக அவர் தயாரித்த புத்தகத்தில் திரு. சுப்பிரமணியம் என்று போட்டிருந்ததை என்னுடைய கழகத்தைச் சேர்ந்த ஆசைத்தம்பி அவர்கள் ஆர்வத்தோடு எழுந்திருந்து அவரைப் பாராட்டுகிற நேரத்தில் "நிதியமைச்சர் அவர்களை நான் பாராட்டுகின்றேன்—ஸ்ரீ என்பது தமிழர்க்கு உகந்ததல்ல, என்று நாங்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன காலத்தில் சீச்சி என்று எங்களை எல்லாம் இகழ்ந்த இவர், இன்றைய தினம் 'ஸ்ரீ' என்பதை விட்டுவிட்டு 'திரு' என்று போட்

"இல்லை!!"

"ஐக்கிய இந்தியா, அகண்ட பாரதம், என்று பேசுகிறார்களே, சுதந்திரத்துக்குப் பின் அது உருவாகியிருக்கிறதா? வானளாவப் பேசிடினும், நடைமுறையில் அது ஏற்பட்டுள்ளதா? "இல்லை!", என்று பதிலளிக்கிறார், கூனூர் நாராயண அய்யர் என்பார். சென்னை இலக்குமிபுரம் இளைஞர் சங்கத்தில், "சுதந்திரத்துக்குப் பின் இந்தியா முன்னேறியிருக்கிறதா?", என்கிற தலைப்பில் பேசுகிறபோது, "இல்லை!" என்று குறிப்பிட்டு, அதற்கான ஆதாரங்களுடன் விளக்கியிருக்கிறார்.

"ஐக்கிய இந்தியாவா இப்போது இருக்கிறது? இல்லை! பதினான்கு, பாகிஸ்தான்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது." என்று குறிப்பிடுகிறார். பதினான்கு மொழி வழி அரசுகளையே, அவர் பாகிஸ்தான் என்று குறிப்பிடுவது. இவைகள், எதிர்காலத்தில், தனித் தனியாகப் பிரிந்துபோனாலும் ஆச்சரியமில்லை என்கிற கருத்திலேயே "கருவிலே உள்ள 14 பாகிஸ்தான்கள்," என்று விளக்கமளித்திருக்கிறார்.

அஸ்ஸாம் தகராறு, பஞ்சாப் மொழிச் சிக்கல், மராட்டியர் தன்னரசு, குஜராத்தியர் கோபம், பீகாரிகள் வங்காளியர் சண்டை, கேரளத்துச் செங்கொடி, தமிழகத்தின் தனியரசுத் தாகம், இவைகளையெல்லாம் எண்ணிடின், நாராயணர் கூற்று பொய்க்கும் என்று கருத இயலும்? ஒவ்வொன்றும், எந்தப் பிரச்சினையையும் தன்னுடையதாகக் கருதுகின்றதே அன்றி, ஏகஇந்தியா ரீதியிலா? அல்லவே! வேண்டுமானால், டில்லியிலே மந்திரியாக யிருப்பவர்கள், ஏக இந்தியா—ஏக இந்தியா என்கிறார்கள். மந்திரியாயிருந்தபோது அப்படித்தான் பேசினார் மராட்டியத் தலைவர் காட்கில்! இப்போது, மராட்டியமே முக்கியம்—பிறகே ஐக்கியம், என்கிறார்!! ஆதலால், நேருவுக்கு அருகிலிருப்போர் மட்டும், அதுவும் அங்கே உளோம் என்கிற காரணத்துக்காக இப்படி ஐக்கிய ஆலாபனம் செய்கின்றனரே அன்றி, எவருடைய இருதயத்திலும், ஏக இந்தியாவைப் பற்றிய உறுதியான கனவுகூட இல்லை. எனவேதான் நாராயணர் கேட்கிறார்,

"இந்த நிலையில் நேருவுக்குப் பிறகு என்ன ஏற்படும்? தனக்குப் பின் ஒரு வாரிசையா உண்டாக்கி வைத்திருக்கிறார்!!"

என்று. நாராயணர், அரசியல் வாதியல்ல! பொது மனிதர்!! இப்படிப்பட்ட சந்தேகம், எதிர்காலம் பற்றி யோசிக்கும், யாருக்குத்தான் ஏற்படாமலிருக்க முடியும். இப்படி ஏக இந்தியாவை உருவாக்குவதில் மட்டுமல்ல, பொருளாதாரத் துறையிலும் என்ன முன்னேற்றத்தைக் கண்டுவிட்டது? என்று கேட்கிறார்.

பெரிய பெரிய அணைக்கட்டுகளைக் கட்டுவதாகச் சொல்லுகிறார்கள். சரி! அதனால், அரிசி விலை முன்னைவிட குறைந்துவிட்டதா?

உலக பாங்கின் கடன், ஸ்டலிங் தொகையின் இருப்பு, இப்படி ஏதேதோ கூறலாம். ஆனால் சராசரி மனிதனுக்கு இதைப்பற்றியா கவலை? அதையே இவரும் சுட்டிக்காட்டுகிறார்—அரிசி விலை இறங்கியா இருக்கிறது? இல்லையே! அரசியலிலிருக்கும் நம் போன்றோர், இதுபோன்ற விஷயங்களை எடுத்துரைக்கும்போது, ஏனையோருக்கு எரிச்சல் ஏற்படக்கூடும். நாராயண அய்யர், நம்மவரல்ல! பேசிய இடமும் நமது மேடையல்ல!!-எனினும், இந்தக் கருத்துக்கள் கிளம்புகின்றன. என்ன காரணம்? நாம் கூறுவதில் உண்மையிருக்கிறது என்பதுதானே!! ★

சட்ட மன்றத்தில் சங்க நூற்கள்

டதினாலே நான் அவரைப் பாராட்டுகிறேன்—என்றுசொல்ல உடனே ஓகோ இது கட்சிப் பிரச்னை ஆகிவிட்டதோ என்ற கலக்கத்திலே, சுப்பிரமணியம் அவர்கள் உடனே எழுந்திருந்து—“அன்பர் ஆசைத்தம்பி சொல்வதைப் போலல்ல, நான் இதற்கு இரண்டாண்டுக்கு முன்னாலேயே திரு என்றுதான் போட்டுக்கொண்டேன்” என்று பதிலளிக்க, ஆசைத்தம்பி அவர்கள் எழுந்திருந்து “நீதிக் கட்சியின் சார்பில் நாங்கள் நீண்டகாலமாகவே திரு என்பதை வலியுறுத்தி வந்திருக்கிறோம் அதனுடைய எதிரொலி தான் நீங்கள் திரு என்று போட்டுக்கொண்டது” என்று சொல்ல, அது உண்மைதான் என்பது போல அந்த அறிஞர் அவையில் அவர் எங்களைப் பார்த்து ஒரு புன்னகையைப் பரிசாக அளித்தார்கள். இதிலே இருந்து அரசியல் நிலைமை எப்படியிருக்கிறது என்பதை உங்களுக்கு விளக்குவதற்காகச் சொல்கிறேன் என்று நீங்கள் கருத வேண்டாம்.

என்னைப் பார்த்தும், என்னைப் போன்றவர்களைப் பார்த்தும் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் என்ன சொல்லுகின்றார்கள் என்றால், “நாங்கள் எல்லாம், சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு, தடியடிக்கு ஆட்பட்டு உப்புச் சத்தியாக்கிரகத்திலே ஈடுபட்டு, நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டுக்கொண்டிருந்த நேரத்தில் அண்ணாத்துரையும், அன்பழகனும், நெடுஞ்செழியனும் மற்றவர்களும் கல்லூரியில் உட்கார்ந்து பட்டப் படிப்புக்காகப் படித்துக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட அடிமை மனப்பான்மை படைத்தவர்களை நாடு ஏற்குமா நாடு நம்பலாமா என்று இன்றைய தினம் கேட்கின்றார்கள். இன்றைய தினம் மாணவர்கள் அரசியலில் ஈடுபடுதல் ஆகாது என்று அறிவுரையைத் தருகின்ற ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள், அதே அறிவுரையை சொல்லாலே அல்ல, செயலாலே நாங்கள் நடத்திக் காட்டியதைப் பாராட்டவா செய்கின்றனர்? இல்லை.

அந்தக் காலத்திலே அரசியலில் நுழையாமல் அறிவு தேடும் நோக்கத்தோடும், கல்வித் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள், காட்டுக் கூச்சல் போலக் காட்சியளிக்கக் கூடிய அரசியலில் நுழையக் கூடாது என்றும் ஒதுங்கிஇருந்த எங்களைப் பாராட்டாமல் நாங்கள் எல்லாம் அடிமை மனப்பான்மையால் படித்துக்கொண்டிருந்ததாக சொன்னால், இதை இன்றைய தினம் கேட்டுக்கொண்டிருக்கின்ற மாணவ நண்பர்கள் நானோ அல்லது நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்களோ எவ்வளவுதான் அவர்களுக்கு அறிவுரை தந்தாலும், நம்மையும் பிற்காலத்திலே அண்ணாத்துரையைத் தூற்றினது போலத் தூற்றினால் என்ன செய்வது என்று அவர்கள் அரசியலிலே நுழைகின்றார்களே தவிர, யாரும் அவர்களை அரசியலுக்கு இழுக்கவில்லை. ஆகையினாலே மாணவர்களுக்கு, அரசியலிலே இடம் இருக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை—நான் வேறோர் கூட்டத்தில் எடுத்துச் சொன்னபடி—நாம் நடத்துகின்ற அரசியல், மாணவர்களும் நுழைய வேண்டிய அவசியத்தை உண்டாக்குகிறதா இல்லையா, என்பதுதான் பிரச்சினை. இது மாணவர்கள் தீர்க்கவேண்டிய பிரச்சினை அல்ல, அரசியல் உலகத்திலே உள்ளவர்கள் தீர்க்கவேண்டிய பிரச்சினை. அரசியல் உலகத்திலே உள்ளவர்கள் சீரான முறையிலே ஆட்சியை நடத்தினால் தமிழ்ப் பண்பு கெடாத வகையில் ஆட்சியை நடத்தினால், தமிழருடைய முன்னேற்றத்தைத் தடுக்காத வகையிலே ஆட்சியை நடத்தினால் மாணவர்கள் தங்களுடைய பேராசிரியர்களுடைய காலடியில் அமர்ந்து பெரும் புலவர்கள் அளித்த ஏடுகளை எல்லாம் படித்து தமிழ்ப் பண்புகளை அறிந்து மனதில் வைத்து கல்வித் துறையிலே முன்னேறலாம்.

அமைச்சர், மாணவர்கள் அரசியலிலே நுழைதல் ஆகாது என்று அறிவுறுத்தியதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். நான் அரசியல் உலகத்திலே உள்ளவர்களுக்கு இன்றைய தினம் சொல்லிக்கொள்ளுவேன்—மாணவர்கள் நுழைதல் ஆகாது என்று நீங்கள் அறிவுரை தருவதைப் போலவே அரசியலை மாணவர்கள் வந்து நுழையத்தக்க அளவுக்கு அமளி உள்ளதாக ஆக்கிவிடாதீர்கள் என்று ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களை நான் பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஆனால் ஒன்று. ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் மாணவர்கள் அரசியலில் நுழையக்கூடாது என்ற பொதுக் கருத்தை வலியுறுத்திக் கொண்டு வருவதை நீதிக் கட்சியும் நீண்ட காலமாகவே வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் மாணவர்கள் அரசியலில் அதிகமான அளவுக்கு ஈடுபடாமல் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துவது ஆட்சிப் பொறுப்பிலே உள்ள அமைச்சர்களுடைய உண்மை எண்ணமாக இருக்குமானால், நான் ஒன்றை அவர்களுக்குக் கவனப்படுத்துவேன். இரு திங்களுக்கு முன்னால், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய கூட்டம் வடக்கே நடைபெற்ற நேரத்தில் காங்கிரஸ் கட்சி இந்தத் தேர்தலிலே தோற்றுவிட்டதற்குக் காரணம், பொதுவாக வாலிபர்களும்—குறிப்பாக மாணவர்களும் காங்கிரசை ஆதரிக்காமல் விட்டதுதான் என்று பண்டித ஜவகர்லால் நேரு எடுத்துக் காட்டி—இனி காங்கிரஸ் கட்சிக்காரர்கள் வாலிபர்களை ஒன்று திரட்ட வேண்டும்—மாணவர்களைக் காங்கிரசுக்குள்ளே அழைத்துக்

‘ஹோம்லண்ட்’ இதழில், “கழகம் வளருகிறது” (D. M. K. Marches) என்ற பகுதியில், கழகத்தின் சார்பில், ஆங்காங்கு நடைபெறும் பொதுக்கூட்டங்கள் பற்றியும், மற்றும் கழக சம்பந்தமான முக்கிய நிகழ்ச்சிகள் பற்றியும் வெளியிடப்படுவதால், கழகச் செய்திகளை ஆங்கிலத்தில் அனுப்புமாறு கழகத் தோழர்கள் வேண்டப்படுகிறார்கள்.

இங்ஙனம்,
நிர்வாகி,
ஹோம்லண்ட்.

காங்கிரஸ் வலை வீசுகிறது!

கொண்டுவர வேண்டும், மாணவர்கள் பிரிவை காங்கிரசின் சார்பில் கல்லூரிகளில் ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார்களா இல்லையா என்பதை நெஞ்சிலே கைவைத்து ஆட்சியாளர்கள் சொல்லவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அந்தத் தீர்மானத்தை அ. இ. கா. க. ரத்து செய்கிற மறுநாள், நான் சார்ந்திருக்கின்ற கழகத்தின் சார்பிலே சொல்லுகின்றேன்—என்னுடைய கழகத்தில் மாணவத் தோழர்கள் ஈடுபாடு கொள்ளத் தேவை இல்லை என்று நாங்களும் தீர்மானம் நிறைவேற்றுவோம். ஆனால் மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சியிலே ஈடுபாடுகொள்ள வேண்டும் என்று ஆயிரம் மைலுக்கு அப்பாலே தீர்மானத்தைப் போட்டுவிட்டு, மற்றோர் அவையிலே அந்தக் கட்சிக்கு அடங்கி ஆணையைச் சிரமேல் ஏற்று நடக்கவேண்டிய பொறுப்பிலே இருப்பவர்கள் மாணவர்கள் அரசியலிலே ஈடுபடுதல் ஆகாது என்பதை எடுத்துச் சொன்னால், அதற்குப் பொருள் என்ன கற்பிக்க முடிகின்றது என்று என்னால் யூகித்துக்கொள்ள முடியவில்லை. இந்த அவையிலே அறிஞர்கள் இருக்கிறார்கள்—ஆன்று அடங்கிய பெரியோர்கள் இருக்கிறார்கள்—ஆராய்ந்து பார்க்கத் தக்க விற்பனர்கள் இருக்கிறார்கள்—மாணவர்கள் அரசியலில் நுழைதல் ஆகாது என்று அமைச்சர் பெருமகனார் சொன்னது 100-க்கு 100 உண்மையாக இருக்குமானால், நடைமுறை உண்மையாக இருக்குமானால் அவர் சார்ந்திருக்கிற கட்சியிலே அப்படித் தீர்மானம் நிறைவேற்றக் காரணம் என்ன? தீர்மானத்தை அங்கே போட்டுவிட்டு இங்கே வந்து மாணவர்கள் அரசியலில் நுழைதல் ஆகாது என்று எடுத்துச் சொன்னால் அதில் பொருத்தம் எங்கிருந்து வருகிறது? என்பது குறித்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதிலே இருந்து மாணவர்களை கட்சி அரசியலுக்கு நான் அழைக்கிறேன் என்று கருதத் தேவை இல்லை. இப்படிப்பட்ட அரசியல் ஆகாது என்றுதான் வலியுறுத்துகின்றேன்.

மற்றும் ஒன்று, நீங்கள் எவ்வளவுதான் பூட்டித் தாளிட்டாலும் தென்றல் எப்படிச் சின்னத் துளை வழியாக உள்ளே நுழைந்துவிடுமோ அதைப்போல நீங்கள் வெறுத்து ஒதுக்கலாம் அரசியலை, ஆனால் அரசியல் உங்களை வெறுத்து ஒதுக்காது. அரசியல் என்பது ஆண்டவனுக்கு அடுத்த படியான சக்தி படைத்தது, ஆண்டவனுக்கு அடுத்தபடியாக என்று சொன்னதற்குக் காரணம் ஆண்டவனை எப்படிப் பலர் பல மாதிரிக் கோணங்களிலே இருந்து பார்த்ததாகப் பாவனை சொல்லுகின்றார்களோ, அதைப்போல் அரசியலைப் பற்றியும் பலர் பலமாதிரி பாவனையில் பேசுகின்றார்கள்.

அவைகள் இரண்டும் மிகுந்த சக்தி வாய்ந்தன, யாரும் ஒதுக்கிவிட முடியாது.

எனது மதிப்புக்குரிய நண்பர் கி. ஆ. பெ. வி. அவர்கள் உங்களை எல்லாம் தமிழார்வம் பெறச் சொன்னார். சொல்லுகின்ற நேரத்திலேயே அவர் ஒரு 5-நிமிடத்திற்கு ஒரு முறை என்ன எடுத்துச்சொன்னார்? பேசுகின்ற முறையிலே தமிழ் எழுதவேண்டும் என்று சொனால், 'யார் பேசுவதைப்போல்?' என்று கேளுங்கள் என்று சொன்னாரல்லவா?—யாரைக் கேட்பீர்கள்? கேட்பதுதான் அரசியல். வேறு ஒன்றுமல்ல. இருக்கிற சிக்கல்களை விளக்கி அந்தச் சிக்கல்களை நீக்கவேண்டுமென்று நீங்கள் எங்காவது கேட்டால் அது அரசியலாகும். ஏன் என்றால் 10-பேர் ஒன்றாகக் கூடி ஒன்று வேண்டும் என்று கேட்பதும் 8-பேர்கூடி வேண்டாம் என்பதும் — இந்த இரண்டுக்கும் இடையிலே ஏற்படுகின்ற கருத்து மோதுதலுந்தான் அரசியலே தவிர, அது பஞ்சமாபாதகத்திலே ஏதோ துரதிர்ஷ்டவசமாகச் சேர்க்கப்படாமல் இருக்கின்ற ஒன்றல்ல.

அதைச் சொல்லுகின்ற அத்தனைபேரும் ஒன்று அரசியலிலே இருந்துகொண்டு மாணவர்கள் தங்களுக்குப் பயன்படவில்லையே என்ற பெருமூச்சை அடிப்படையாக வைத்துப் பேசுகின்றவர்கள். மற்றுஞ் சிலர் அரசியலிலே இருந்துவிட்டு அலுப்பினாலேயோ வெறுப்பினாலேயோ கோபத்தினாலேயோ தாபத்தினாலேயோ அரசியலை விட்டு வெளியே சென்றவர்கள். மற்றுஞ் சிலர் இன்னார் இருக்கின்றவரையில் அரசியலில் எனக்கு இடமில்லை, நான் வரமாட்டேன் என்று கருதிக் கொண்டிருப்பவர்கள்.

இன்னுஞ் சிலம்பர் அண்ணாத்துரையைப் போன்றவர்களை நான் அனுப்பியிருக்கிறேன் என்று விசுவநாதத்தைப் போன்றவர்கள் பெருமையோடு சொல்லிகொண்டிருப்பார்கள். இப்படி எந்த வகையிலே ஒதுங்கி இருந்தாலும் யாரும் அரசியல் தொடர்பிலிருந்து விலகிவிட்டவர்கள் அல்ல. ஆகையினாலே அரசியலிலே மாணவன் கலக்கலாமா வேண்டாமா என்பதல்ல இன்றையதினம் பிரச்சினை.

அரசியல் மாணவர்களை இழுக்கத்தக்க அளவுக்கு அமளி உள்ளதாக இருக்கலாமா என்பதுதான்.

பிரிட்டிஷ் நாட்டில் சாதாரணமாக மாணவர்கள் கட்சி அரசியலில் கலப்பதில்லை.

ஆனால் பிரிட்டனில் சூயஸ் பிரச்சினை ஏற்பட்டபோது பிரிட்டிஷ் கப்பல்கள் சூயஸ் கால்வாய் வழியாக நாசருக்கு அடங்கிப் போக வேண்டுமா அல்லது நாசரை ஒழித்துவிட்டு சூயஸ் கால்வாயைத் தங்களுடைய தாக்கிக் கொள்ள வேண்டுமா என்ற பிரச்சினை வந்தபோது ஆக்ஸ்போர்டிலோ கேம்பிரிட்ஜிலோ படித்துக் கொண்டிருந்தவர்கள்—பொருளாதாரப் புத்தகத்தில் ஆறுவது அத்தியாயத்தில் 25-வது பக்கத்தில் 16-வது வரியில் என்ன இருக்கிறது என்று பேசிக்கொண்டிருக்கவில்லை. அந்தப் புத்தகத்தை ஒரு பக்கத்திலே வைத்துவிட்டு 'சூயஸ் ஆதிக்கம் பிரிட்டாஷாருக்கே' என்றார்கள். அவர்கள் எல்லாம் கல்வித் துறையிலே பின்தங்கியவர்கள் அல்ல. அவர்கள் எல்லாம் அரசியல் துறையி

கல்வியிலேயே அரசியல் இருக்கிறது

லேயும் பின் தங்கியவர்கள் அல்ல. நாட்டுக்கு உயிர் நாடியாக இருக்கிற பிரச்சினை எழுகின்ற நேரத்தில் அரசியலில் தலையிடத்தான் செய்வார்கள்.

சில நாட்களுக்கு முன் என்று நான் கருதுகின்றேன்—அஸ்ஸாம் மாநிலத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றினை அசாமிலே வைப்பதா பீகாரிலே வைப்பதா என்ற பிரச்சினை வந்து டெல்லியிலே உள்ள ஆட்சிப் பொறுப்பினர் பீகாரில் தான் வைப்போம் என்று பிடிவாதம் செய்ததால் அசாம மாநிலத்திலே உள்ள மாணவர்கள் அத்தனை பேரும் பள்ளிக்கூடத்திற்குச் செல்லாமல் ஊர்வலம் வந்து அசாமில் தான எண்ணெய் கிணறு இருக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்திருக்கிறார்கள். அமைச்சர் சுப்பிரமணியத்தின் அகராதிப்படி பார்த்தால் அவர்கள் மாணவர்கள் அல்ல!

ஆனால் பாலகங்காதர திலகர் மகாத்மா காந்தி பண்டித மோதிலால் நேரு ஜவகர்லால் நேரு. பெருங்கவி சுப்பிரமணிய பாரதியார் இவர்களின அகராதிப்படி பார்த்தால் அவர்கள் எல்லாம் நாட்டுப் பற்று உடையவர்கள். ஆகையினாலே இன்றைய தினம் நாட்டுப் பற்று நாசமாக்கப்படுகின்ற செயல்களை ஆட்சியாளர்கள் செய்யாமல் இருந்தால்—மாணவர்கள் உண்மையிலேயே கல்வித் துறையிலே கவனத்தைச் செலுத்துவார்கள். இரண்டாவது, மாணவர்களுக்குத் தரப்படுகின்ற கல்வியிலேயே அரசியல் இருக்கிறது. இல்லை என்று சொல்பவர் யார்? இன்றைய தினம் நம்முடைய பெரும்புலவர் அறிஞர் வரதராசனார் அவர்கள் தமிழ் வகுப்பு நடத்துகின்றபோது அகத்தையோ புறத்தையோ கற்றுத் தருகின்ற நேரத்திலேயும் அவர்களாக அரசியல் புகுத்துவதில்லை. அவர்கள் எடுத்துக் காட்டுகின்ற பாடத்தில் அரசியல் இருக்கிறது. இல்லை என்று சொல்வது யார்? திருக்குறளிலே அரசியல் இருக்கிறது. பரிமேலழகர் உரை தேவையா இல்லையா? அரசியல் இருக்கிறது. எதில் அரசியல் இல்லை? அடுக்களையில் உட்காருகின்ற ஆரணங்கிலிருந்து — அகம் புறம் படிக்கின்ற மாணவர்கள்வரை அரசியல் அவர்களை நிழலைப் போலத் தொடரும். அவர்களை விட்டு விலகாது. மக்களாட்சி என்றாலே அதுதானே பொருள்? மக்கள் ஆட்சி என்று சொல்லிவிட்டு மாணவர்களே! நீங்கள் அரசியலிலே கலந்து கொள்ளாதீர்கள்—பாடத்தைப் பற்றி மட்டும் எண்ணிக்கொண்டிருங்கள் — தொழிலாளர்களே! உற்பத்தியைப் பெருக்குங்கள் — முதலாளிகளே! புதிய தொழில்களை உண்டாக்குங்கள்—மாதர்களே! குடும்பத்தைப் பேணுங்கள் — குடும்பம் அதிகமாகிவிட்டால் குடும்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள் — என்று சமுதாயத்திலே இருக்கின்றவர்களிலே ஒவ்வொரு பிரிவினரையும் தள்ளிவிட்டால் மிச்சம் அரசியலுக்கு யார் இருக்கிறார்கள் என்று பாருங்கள்.

இப்பொழுது அமைச்சர்களாக இருப்பவர்கள்; இனி வரலாம் என்று ஆசைப்படுகின்றவர்கள்—இந்த இரண்டு சாரார் தவிர அரசியலுக்கு வேறு ஆள் கிடைக்காது.

ஆகையினாலே மக்களாட்சியினுடைய மாண்பு கிடைக்கவேண்டுமானால் மாணவர்கள் அரசியல் பிரச்சினைகளை உயிரூட்டத்துடன் கவனிக்கவேண்டும். ஆனால் அரசியல் முறைகளிலும், அரசியல் அமளிகளிலும் அவர்கள் நுழையத் தேவை இல்லை. அதை நான் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றேன். இப்பொழுது அரசியலைப் பற்றியே கவலைப்படாமல் B. A. வரையில் படித்துவிட்டு அல்லது புலவர் வகுப்பு முடித்துவிட்டு — நான் பெறவேண்டிய படிப்பு பெற்றாகிவிட்டது. இன்ன கல்லூரியில் வேலைக்கமர்ந்துவிட்டோம்—இனி அரசியலைப் பற்றிக் கவனிப்போம் என்று ஒரு நாளைக்கு அந்தப் புலவர் நினைத்து —தெருத் திண்ணையிலே உட்கார்ந்து எதிர்வீட்டுக்காரரைக் கூப்பிட்டு அரசியல் பேசலாம் வாருங்கள் என்று நாட்டிலே எத்தனை கட்சிகள் இருக்கின்றன? —'நாட்டிலே உள்ளது இந்த இரண்டு மூன்று கட்சி—இதிலே யார் யார் இருக்கிறார்கள்?—அதிலே யார் யார் இருக்கிறார்கள் —அவர்களுக்கு உள்ள கொள்கைகள் எல்லாம் என்னென்ன—இன்னின்ன கொள்கைகள் —எதிலே அவர்களுக்குச் சண்டை —இதிலே சண்டை — ஓகோ—நான் அப்படியானால் இதிலே சேருகின்றேன் என்று முடிவு எடுத்துச் செயல்பட முடியாது. ஏன் என்றால் உள்ள நெகிழ்ச்சி என்பது அவ்வப்போது ஏற்படுகின்ற எண்ணத்தை ஒட்டித்தான் வரவேண்டுமே தவிர திடீரென்று சாதாரணமாகக் காற்று ஊதினால் பெலூனுக விரிவதைப்போல் புதிய எண்ணத்தை மனத்திற்குள்ளே புகுத்தினால் மனம் ஏற்றுக்கொள்ளாது.

மனம் எப்படி வளர்ச்சிக்கு உட்பட்டதோ அதைப்போல எண்ணமும் எழுச்சியும்கூட வளர்ச்சிக்கு உட்பட்டது. அந்த வளர்ச்சி என்றைய தினம் தடைப்படுகின்றதோ அன்றைய தினம் மனிதன் மூன்று நிலைகளை அடைகின்றான். ஒன்று அவன் சாகிறான். அல்லது அவன் காட்டுமிராண்டி ஆகின்றான் — மற்றொன்று அவன் பைத்தியக்காரனுகின்றான். இந்த மூன்று நிலைகளைத் தவிர மற்ற எந்த நேரத்திலேயும் மனிதனுடைய உள்ளத்திலே எண்ணமும் உணர்ச்சியும் எழுச்சியுடையாமல் இருக்காது. ஆகையினாலே மாணவர்கள், அரசியல் பிரச்னைகளை கவனிக்காமலேயே இருக்க வேண்டும் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். ஆனால் அந்த அச்சத்திற்குக் காரணம் என்ன? இன்றைய தினம் தமிழ் மாணவர்களிடத்தில் தமிழ் ஆர்வம் காணப்படுகின்றது. அவர்கள் தங்களுடைய இனம் எது என்று கேட்கின்றார்கள். தங்களுடைய இனம் ஏன் இழிநிலையில் இருக்கின்றது என்று கேட்கின்றார்கள். தங்கள் எல்லையைத் தொலைத்தவர்கள் யார் என்று கேட்கின்றார்கள். பூமிப்படியிலே இருக்கின்ற தங்கத்தை ஏன் கல்லி எடுக்கவில்லை என்று கேட்கின்றார்கள். மலைச்

அரசியல் நிழலைப்போலத் தொடரும்

சரிவுகளிலே இருக்கின்ற இரும்பு எங்களுக்கு ஏன் கிடைக்கவில்லை என்று கேட்கின்றார்கள். எங்களுடைய நாட்டுத் தமிழ்மகன் ஏன் வெளிநாடுகளில் கூலியாக இருக்கின்றான்? வெளி நாடுகளில் கூலி வேலைசெய்து கொண்டிருந்தவன் இங்கே எப்படிக் கொடிகட்டி ஆளுகின்றான்? என்று மாணவர்கள் இன்றைய தினம் கேட்கின்றார்கள். ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் அந்த நேரத்திலேதான் சொல்லுகின்றார்கள் — மாணவர்களே நீங்கள் படியுங்கள்--படியுங்கள்--நித்த நித்தம் படியுங்கள் மென்மேலும் படியுங்கள—புத்தம் புதிய புத்தகத்தைப் படியுங்கள்—அரசியலைப் பற்றிக் கவலைப்படாதீர்கள் என்றுசொல்லுகிறார்கள். ஆகையினால் இந்த புத்திமதி அல்லது அறிவுரை தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்குத் தரப்படுகின்ற அறிவுரையே தவிர, உண்மையானதல்ல.

ஆனால் அதை விளக்குகின்ற அதே நேரத்தில் நான் நம்முடைய மாணவத் தோழர்களை, நீங்கள் கட்சி அரசியலுக்கு வந்து விடுங்கள் என்று அழைக்கவில்லை; நான் அழைத்ததுமில்லை; அழைக்கவுமில்லை. நான் அதற்கு இரண்டு காரணங்கள் சொல்லியிருக்கின்றேன். நான் சார்ந்திருக்கின்ற அரசியல், பிரச்னைகளை அலசிக் கொண்டே என்றென்றும் இருக்கும் அரசியலென்று நாங்கள் கருதவில்லை. என்றைக்காவது ஒரு நாளைக்குப் பிரச்னைகள் தீர்க்கப்பட்டு ஆட்சிப் பொறுப்பு நம்முடைய கரத்திலே தரப்படும் என்று நம்பிக்கையோடு பணியாற்றிக்கொண்டிருக்கும் அரசியலாகும். ஆகையினால், ஆட்சிப் பொறுப்பு நம்மிடத்தில் தரப்படுகிற நேரத்தில் ஆட்சி அலுவலைக் கவனிக்கத்தக்க அறிவாற்றல் படைத்தவர்கள் இன்றைய தினம் மாணவர் மன்றங்களிலேயிருந்து கிடைக்க வேண்டும்.

சர்தார் படேல் அவர்கள் சுயராஜ்யம் கிடைத்தவுடன், இங்கிலாந்து நாட்டிலேயிருந்து இந்த நாட்டிலே பணியாற்றிக்கொண்டு வந்த, பெரிய வெள்ளைக்கார அதிகாரிகளை ஊருக்கு அனுப்பிவிட வேண்டுமென்று மற்ற காங்கிரஸ் தலைவர்கள் வலியுறுத்திய நேரத்திலே சொன்னதை பத்திரிகையிலே படித்த நினைவு இருக்கின்றது. அவர் சொன்னார் வெள்ளைக்கார நாட்டு பெரிய அதிகாரிகளை வெள்ளைக்கார நாட்டுக்கு அனுப்பி வைத்தால், அவர்கள் பார்த்த அலுவலைப் பார்ப்பதற்குப் போதுமான அளவுக்கு இன்றைய தினம் நம்மிடத்தில் திறமை படைத்தவர்கள் இல்லை--வெள்ளையர் இருக்கத்தான் வேண்டும் — என்று படேல் சொன்னார்.

எதிர்காலத்திலே தமிழகம், தனித் தமிழரசு, உறுப்பெறும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கின்ற வரையில் அது ஏற்பட்டால் அதை ஏற்றுக்கொண்டு நடத்துகின்ற திண்தோளும், நெஞ்சுரமும், நேர்மைத் திறனும், படைத்தவர்கள் இன்றைய தினம் மாணவர் உலகத்திலேயிருந்து கிளம்ப வேண்டும்—என்று நாங்களெல்லாம் உண்மையிலேயே விரும்பிக்கொண்டிருக்கின்றோம்.

ஆகையினால் நீங்கள் அரசியலிலே கலக்காதீர்கள் ஆனால் அரசியலை மறவாதீர்கள். உங்களினம் தாழ்த்தப்பட்டுக் கிடக்கிறது என்பதை ஒரு பொழுதும் மறவாதிர்கள். உங்களுடைய நாடு அடிமைப்பட்டு இருக்கிறது— அதை நீங்கள் கனவிலும் மறவாதிர்கள். உங்கள் எல்லை களவாடப்படுகிறது. அதை நீங்கள் எந்த நேரத்திலும் மறந்து விடாதீர்கள். நீங்கள் செல்வ நாட்டில் பிறந்தவர்கள் — தரித்திரத்திலே தவித்துக் கொண்டிருப்பவர்கள் —அதற்குக் காரணம் யாரென்பதை, நீங்கள் பக்கம் பக்கமாக வரலாற்றைப் புரட்டுகின்ற நேரத்திலே, மனக்கண்ணாலே கண்டு பிடிக்கவேண்டும். நீங்கள் களம் புகுந்து குற்றவாளிகளை வழக்கு மன்றத்திலே நிறுத்துகின்ற நேரம் வருகின்றபோது நீங்கள் சுட்டு விரலாலே சுட்டிக் காட்டுகின்றபொழுது, நீங்கள் வீசும் வாதம், இன்றைய தினம் நீங்கள் பெறுகின்ற படிப்பிலேயிருந்து கிளம்புவதாக இருக்கவேண்டும்.

அதற்கேற்ற வகையிலே நீங்கள், மாணவப் பருவத்திலே நல்ல நிலைமைகளைப் பெறவேண்டும் என்று உண்மையிலேயே நான் விரும்புகின்றேன். அதற்கு ஏற்ற நல்ல கருத்துக்களை மாணவர் மன்றம் அளித்து வருகின்றது. நான் இந்த அவைக்கு வருவதற்கு முன்னால் மாணவத் தோழர்கள் தீட்டிய ஓவியங்களைப் போய்ப் பார்த்தேன். ஓவியங்களைப் பார்த்தால், ஓவியத்திலே அரசியல் இல்லையென்று கருதுகிறீர்கள்? 15-ஆண்டுகளுக்கு முன்னாலே இத்தகைய ஓவியங்களைத் தீட்ட மாட்டார்கள். 100-ஓவியங்களில் 90-ஓவியம் கடவுளைப் பற்றிய ஓவியங்களாக இருக்கும். வேண்டுமா வேண்டாமா அந்தப் பிரச்சினையல்ல—அது நாமெல்லாம் ஒரு பொழுது கூடித் தீர்மானித்து விடுகின்ற பிரச்சினையல்ல! நான் எடுத்துக்காட்டுக்குச் சொல்லுகின்றேன். பத்தாண்டுக்கு முன்னாலே ஓவியமென்றால் என்ன ஓவியம் இருக்குமோ, அதுவா இன்றைதினம் இருக்கின்றது?

மிக்க திறமையோடு ஓவியத்தைத் தீட்டியிருக்கின்றார்கள் மாணவத் தோழர்கள்! அவர்கள் அந்தி வானத்தைக் காட்டியிருக்கின்றார்கள் — அரும்பைக் காட்டியிருக்கின்றார்கள், மலரைக் காட்டியிருக்கின்றார்கள் — அரும் பெரும் வீரப் பெரு மக்களைக் காட்டியிருக்கின்றார்கள் — அழகுகளைக் காட்டியிருக்கிறார்கள்— இவைகளையெல்லாம் காட்டியிருக்கின்ற அருந்திறமை மாணவப் பருவத்திலேயே கிடைத்திருக்கிறது. இவ்வளவு ஓவியத் திறம் படைத்த மாணவன், எதிர்காலத்தில் ஏதாவது ஒரு பள்ளிக்கூடத்திலே போய் ஓவிய ஆசிரியராவதற்காக மனுக்கொடுத்து அந்தப் பள்ளிக்கூட நிர்வாகிகள் இன்ன இனத்தானுக்குத்தான் எங்கள் கல்லூரியில் இடம் உண்டு என்று சொன்னால் உடனே, ஓவியக்கலை படித்தானே, இந்த மாணவன், அரசியலை வாசற்படியிலே அன்றைய தினம் பார்க்கிறான்.

ஆக எதிலே பார்த்தாலும் — நான் தெளிவாகச் சொல்லுகின்

தெனாலிராமன் சித்திரம்......

றேன் — அரசியலிலே இருந்து நீங்கள் தப்பித்துக்கொள்ள முடியாது.

சிலப்பதிகாரம்கூட என்ன என்று கருதுகின்றீர்கள்? 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்'—எங்கே அரசியல் இல்லாமல் போய்விட்டது? இராமாயணத்தைப் படிக்கின்ற பாகவதர்கள் அரசியல் காட்டாமலா இருக்கிறார்கள்? அரசியல் என்பது ஏதோ பாதகத்திலே ஒன்று என்றுகருதவேண்டாம். மாணவப் பருவத்திலே கல்வியைக் கெடுத்துக்கொண்டு அரசியலில் நுழையாதீர்கள். அதைத்தான் தமிழனிடத்திலே பற்றுக் கொண்டவர்கள் சொல்லுவார்கள். பிறர் எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில் சொல்லுகின்றவர்கள் எந்த மனப்பான்மையோடு சொல்லுகின்றார்கள் என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்துக்கொள்ள வேண்டும், என்பதை வலியுறுத்தத்தான் நான் அதனைச் சொன்னேன். ஆகையினாலே வளர்ந்திருக்கின்ற இந்தத் தமிழார்வம் நன்றாகக் கனிந்து தமிழ் நாட்டுக்கு நல்ல சுவையும் பயனும் கிடைக்கத்தக்க விதத்திலே, நல்ல வளர்ச்சி ஏற்படவேண்டும்.

இப்பொழுது நாம் இருக்கிற நிலை எப்படியிருக்கிறதென்றால் தெனாலிராமன் சித்திரத்தைப் போல் இருக்கிறது. தெனாலிராமன் சித்திரம் என்றால் உங்களுக்குத் தெரியும். மன்னன் கூப்பிட்டு உனக்குச் சித்திரம் எழுதத் தெரியுமா என்றான்—தெரியும் என்றான்—அப்படியானால் எழுது என்றான்—அதற்கு ஒரு மாளிகை தரச் சொன்னான்—சித்திர வேலைப் பாடு முடிந்ததும் மன்னன் தெனாலிராமனை அழைத்துக் கொண்டு போனான் — சுவரைப் பார்த்தான் அழகான கண் மட்டும் இருந்தது. இதென்ன கண் இருக்கிறதே மூக்கு எங்கே என்று கேட்டான். இதோ பாருங்கள் என்று அழைத்துக் கொண்டு போய் இன்னொரு பக்கத்திலே காட்டினான்—மூக்கு மட்டும் இருந்தது. கண் வரையிலே அழகாகத்தான் இருந்தது. மூக்கு வரையிலே அதுவும் அழகாக இருந்தது. இன்னொரு பக்கத்திலே தோள் இருந்தது—இன்னொரு பக்கத்திலே தாள் இருந்தது. இன்னொரு பக்கத்திலே உடல் இருந்தது. வேறொரு பக்கத்திலே சில உறுப்புக்கள் அழகழகாக எழுதப்பட்டிருந்தன — அவை ஒன்று சேர்க்கப்படவில்லை—ஏன் என்று கேட்டதற்குத் தெனாலிராமன் சொன்னான் நான் அந்தந்த உறுப்புக்களை எவ்வளவு அழகாக எழுதுகின்றேன் என்பது மொத்தமாக எழுதினால் கண்டுபிடிக்க முடியாதல்லவா? இதோ கண்ணைப் பாருங்கள் அழகாக இருக்கிறதல்லவா எனக்குக் கண் நன்றாக எழுதத் தெரியும்—இதோ மூக்கு நன்றாக எழுதத் தெரியும் அல்லவா — என்று எடுத்துச் சொன்னான் என்று ஒரு பட்டிக் காட்டுக் கதை சொல்வார்கள்.

தமிழனுடைய அறிவு இன்றையதினம் தெனாலிராமன் சித்திரத்தைப் போல சிதைந்து சிதைந்து இருக்கிறது. இதெல்லாம் ஒரே கோட்டுக்குள்ளே கொண்டுவரப்பட வேண்டும்.

அப்படிக் கொண்டு வரப்படுகின்ற நாளிலேதான் தமிழனுடைய விடுதலை உருவாக்கப்படும். அப்பொழுதுதான் தமிழன் நல்வாழ்வு பெறுவான் என்ற நல்ல நம்பிக்கையோடு உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

★

பொதுச் செயலாளர் வேண்டுகோள்!

பெரியோர்களே! தோழர்களே!!

வணக்கம்

பன்மொழி பயின்று தேர்ந்த நல்லாசிரியரும், நற்றமிழ் வாழ—வளர—அரும் பணிகள் பல ஆற்றி வருபவரும், நேரிய கொள்கைகளுக்காகப் பரிந்து பேசவும் போராடவும்—தடியடி தாங்கவும், சிறை புகவும் துணிந்த செயல் வீரரும், திராவிட முன்னேற்றக் கழகத்திடத்து நீங்காப் பற்றும் தணியா ஆர்வமும் கொண்டு உழைத்து வருபவரும் ஆன பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள் ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகிறார்கள் என்பது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பதாகும்.

பன்மொழிப் புலவரின் பொன்விழாவைப் பெருமைக்குரிய வகையிலும், பூரிப்புக் கொள்ளும் முறையிலும் சிறப்பாக நடத்த வேண்டும் என்பது நண்பர்கள் பலரின் வேணவாவாரும். அவரது பொன் விழாவைக் கொண்டாடி நாம் மகிழ்ச்சியடைவதோடு மட்டுமல்லாமல், அவரையும் நிலையாக மகிழ்விக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாகவும் இருக்கிறோம். பொதுவாகப் புலவர் பெருமக்களைப் பீடிக்கின்ற வறுமை அவரைப் பெருமளவுக்குப் பீடித்து அவரை வாட்டி வதைக்கிறது. அந்தக் கொடுமையினின்றும் அவரை விடுவித்து, மகிழ்ச்சிகொள் அமைதியான வாழ்வில் அவரை ஈடுபடுத்த வேண்டியும், அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் பயக்க வேண்டியும் அவருக்குச் சிறபபுக்குரிய வகையில் பண முடிப்பைப் பரிசாக வழங்க வேண்டும் என்று நண்பர்கள் பலரும் விரும்பியுள்ளனர்.

பன்மொழிப் புலவர் பொன் விழாக் குழு ஒன்றை உருவாக்கி அதில் அன்பர்கள் பலரையும் உறுப்பினர்களாக ஆக்கிடும் பொறுப்பினைக் கவிஞர் கண்ணதாசன் அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

விழாக் குழுவின் பொருளாளராக இருந்து பணியாற்ற அண்ணாதுரை அவர்கள் இசைவுதந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நிதி தந்து உதவுவோர்:

சி. என், அண்ணாதுரை,
C/o 'நம் நாடு'
24-சூரியநாராயணசெட்டிதெரு.
இராயபுரம், சென்னை-13

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கழகத் தோழர்களையும், கழக ஆதரவாளர்களையும், தமிழார்வங்கொண்ட பிற அன்பர்களையும் பன்மொழிப் புலவரின் பொன் விழா முயற்சி வெற்றியுறப் பேருதவி புரியுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்பன்,

இரா. நெடுஞ்செழியன்

ஆங்கிலம் சிறந்த முறையில் நேரில் கற்பதற்காகச் சென்னையில் அமைந்த தனிப்பெருங் கல்வி அரங்கம்

The School of English Learning

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி சென்னை-1

தமிழ்
எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்
ஒரே வருடத்தில்

இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

சென்ற வருட ஆகஸ்டு மாதம் ஆரம்பமாகிய இங்லீஷ் வகுப்புகள் இந்த வருட ஆகஸ்டில் முடிவடைகின்றன.

புதிய வகுப்புகள்
ஆகஸ்டு 9-ந் தேதி
ஆரம்பமாகின்றன.

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள
கடைசி தேதி 8-8-57

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க.

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும், சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும், அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.

காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் **வகுப்பிற்கு வந்து** ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.

முக்கிய அறிவிப்பு:-

16-வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். சென்னை நகரில் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.

கூடாத போக்கு

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [4-8-57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 3

அலைகடல் துரும்பென, வறுமைக்கும் வளத்துக்குமிடையே, அல்லாடிக்கொண்டிருக்கும் இந்த உபகண்டத்து மக்களின் வாழ்வில், பேரிடி விழுமோ என்று அஞ்சுகிறோம்.

அமெரிக்காவில் விருந்தும் கேளிக்கையும் பெற்றுக்கொண்டு இலண்டன் திரும்பியிருக்கும் பாகிஸ்தான் பிரதமர் சுரவர்த்தியின் பேச்சுக்கள், அச்சத்தை அதிகமாக்குகின்றன.

"அக்கிரமம்! அக்கிரமம்! பாகிஸ்தானைப் பாலைவனமாக்கச் சதி நடக்கிறது. தண்ணீர் விடாமல் தடுக்கிறது இந்தியா; கால்வாய் தகராறு தீரவில்லை. கஷ்டப்படுகிறது பாகிஸ்தான். நீரில்லாமல் எப்படி வாழமுடியும்? பசியாலும் பட்டினியாலும் நாங்கள் சாகவேண்டியதுதானா!" என்று பாகிஸ்தான் முதல்வர் பறைசாற்றுகிறார், செல்லுமிடந்தோறும். அமெரிக்காவிடமிருந்து, இராணுவ தளவாடங்களும், விமானங்களும், வெடிமருந்துகளும் கிடைக்கும் வசதியிருக்கிறது அவருக்கு. அதனால், வார்த்தைகளில், பயமூட்டுதலும், ஆவேசமும் அதிகம் தொனிக்கிறது.

அலட்சியத்தாலோ அல்லது மௌனத்தாலோ பாகிஸ்தானின் இப் பிரச்சாரத்தை விடுவதற்கில்லையென்று டில்லி அஞ்சுகிறது! சுரவர்த்தியின் சோகத்துக்கு, அமெரிக்கா போன்ற இடங்களில் ஆதரவு கிட்டும் என்று கருத்தும் வலுத்து வருகிறது. அதனால் டில்லி பாசன அமைச்சர் பட்டீல், அவசர அவசரமாக அகில இந்திய வானொலி மூலம், "இல்லை! இல்லை!! இந்தியா, கால்வாய் நீரைத் தடுக்கவில்லை. இது, பொய். அரசியல் பித்தலாட்டம்" என்று, எதிர் அம்பு தொடுத்திருக்கிறார்.

தண்ணீர்த் தகராறு, வெறும் வார்த்தைக் குண்டுகளாலும், பிரச்சாரத் தாக்குதலோடும் தீர்ந்துவிட்டால் மிக மிக நல்லது. ஆனால், இந்த மனிதப் பிரச்சினையின் பின்னால், மறைந்திருக்கும் துவேஷ எண்ணமே, நமக்கு அச்சத்தை அளிக்கிறது.

சுரவர்த்தி, தண்ணீர் தகராறோடு இருந்துவிடவில்லை! காஷ்மீரைப் பற்றியும் கண்ணீர் வடித்திருக்கிறார். அமெரிக்காவிடம், இப்பிரச்சினையைத் தீர்க்க உதவியும் கோரியிருக்கிறார். நல்லெண்ணத்தையும் சமரசத் தூதையும் பாகிஸ்தான் பிரதமர் கோரியிருந்தால், பயமில்லை எவருக்கும். குண்டும், விமானமும் கோரியிருப்பாரோ என்கிற அச்சம் ஏற்பட்டிருக்கிறது, டில்லிக்கு!!

அதனாலேயே, உலகம் போற்றும் நேரு பண்டிதர், "எவ்வித நடவடிக்கைக்கும் நாம் தயாராயிருக்க வேண்டும்," என்று எச்சரித்திருக்கிறார். இரண்டொரு நாட்களுக்கெல்லாம் டில்லி பாராளு மன்றத்தில், "எம்மை யார் என்ன செய்ய முடியும்? எமது வசம், இரும்பையும் துளைக்கும் புதுவிதக் குண்டுகள் தயாரிப்பிலுள்ளது தெரியுமா!", என்று கர்ச்சித்திருக்கிறார், இராணுவ மந்திரி கிருஷ்ணமேனன். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 50 கோடி ரூபாய் **அதிகமாக,** இராணுவத்துக்குச் செலவிட டில்லி, முடிவெடுத்திருக்கிறது! இந்தப் பணத்துக்குப் பெரும்பாலும், ஆயுத தளவாடங்களே வாங்கப்படும் என்று தெரிகிறது.

இருதரப்பிலும் வளர்ந்துகொண்டு போகும், மனோபாவத்தைக் கண்டே நாம் அஞ்சுகிறோம்—பிரிவினையைக் கடைசிவரை எதிர்த்த காந்தியடிகள் கூட, பாகிஸ்தானம் மலர்ந்த பிறகு, அதற்கு உதவுவதே நல்வழி எனக் கண்டார். பாகிஸ்தானுக்குக் கொடுக்கவேண்டிய பணத் தொகையில் தகராறு வந்தபோது, "உண்ணாவிரதம் இருப்பேன்!", என்று கூறி நேரு பண்டிதரும் பிறரும் இணங்கும்படிச் செய்தார்.

இந்த நல்லெண்ணம் வளர்கிறது—நேருவும் லியாகத் அலியும் உறவாடுகிறார்கள்—லியாகத்துக்குப் பின்னும் நேசம் பெருகும் அறிகுறி தென்படுகிறது, என்றே எண்ணிவந்தது, உலகு.

இப்போது உலகின் எதிரில், இருவரும் 'முண்டா' தட்ட முற்படுகின்றனர். அஞ்சுகிறோம். உண்மையில், இருவருக்கும், ஆபத்தையும் கேட்டையும் விளைவிக்கும் என்று கவலைப்படுகிறோம்.

எனினும், காங்கிரசில்கூட, பாகிஸ்தான்மீது அருவருப்பும் அசூயையும் கொள்பவர்கள் இருக்கிறார்கள், பழைய கோபத்தை மறக்காதவர்கள் இவர்கள்! எல்லோரையும் சரிக்கட்டி, பாகிஸ்தானத்துக்கும் நம்பிக்கையூட்டி, நல்லெண்ணத்தையும் நேசத்தையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு, பாகிஸ்தானைவிட இந்திய உபகண்டத்துக்கு இருக்கிறது.

சுரவர்த்தியைவிட நேரு உலகில் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் புகழும் அதிகம். எந்தப் பிரச்சினை

யையும் அமைதியாக, கத்தியின்றி யுத்தமின்றி தீர்க்க முயல்பவர் என்று கருதப்படுகிறார். எனவே, அந்த சாத்வீக முறையினை பாகிஸ்தான் விஷயத்திலும் பண்டித நேரு, கைக்கொள்ள வேண்டும்!

*

ஆகஸ்டு 8 அறப்போர்!

அதிருப்தி அடைந்துள்ள தபால் தந்தி சிப்பந்திகள் ஆகஸ்டு 8-ந்தேதி முதல் வேலை நிறுத்தம் செய்வதென முடிவு தெரிவித்திருக்கிறார்கள்.

அவர் தம் குறைகளைப் போக்கிடவேண்டிய அரசோ, மிரட்டலையும் அதட்டலையுமே, காட்டுகிறது. ஏதோ வெளிநாட்டிலிருந்து படையெடுத்து வருகிறவர்களைப் போலக் கருதி பிரசங்கம் செய்திருக்கிறார் பிரதமர் நேரு.

நாட்டின் நலனிலும், தமது பொறுப்பிலும் அக்கரையில்லாதவர்கள் அல்ல, சிப்பந்திகள். எனினும், தேவை, அவர்களை விரட்டுகிறது! அதைப் பூர்த்திசெய்யவேண்டிய அரசோ, குறைகளைத் தீர்க்க முனைவதற்குப் பதில், அதட்டுகிறது!!

"நிலைமையை எப்படியும் சமாளிப்போம். ஒரு வார காலத்துக்கு மாகாண சிப்பந்திகள், ஆசிரியர்கள் முதலியவர்களை இந்த வேலையில் பயிற்சிபெறும்படி செய்யுங்கள்" என்று மாநிலங்களுக்குத் தாக்கீது அனுப்பியிருக்கிறதாம், டில்லி.

இந்த 'ராஜ தர்பார்' போக்கு, எப்போதும் பலிக்காது! கருங்காலிகளைக்கொண்டு, தொழிலாளிகளின், குரலொலியை அடக்க முனைவது, முதலாளிகளின் சுபாவமாகும். சோஷியலிசம் பேசும், காங்கிரசும், தனது குடிமக்களின் குரலுக்கு மதிப்பளிக்காமல், அதே மனோபாவத்துடன் நடக்க முயற்சிப்பது நல்லதல்ல; ஆட்சிநெறியுமல்ல.

குறைகளைத் தீர்க்க நல்லெண்ணத்தையும், அன்பையும் காட்டவேண்டும் ஆள்வோர். அதட்டலும் மிரட்டலும், என்றும் பலனைத் தராது — என்பதை மீண்டும், அரசினருக்கு எச்சரிக்கிறோம்.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

தமிழன் பெற்றிருந்த தனிச் சிறப்பு தெரிகிறது—காண்போர் பாராட்டுகின்றனர்.

கரிகாற் சோழன் உருவச் சிலையொன்றும் அங்கு அமைத்துள்ளனர்—இக்காலத்தவர்.

அன்று அம்மன்னன் அமைத்த 'கல்லணை' தந்த வளம்தான் இன்று, தஞ்சைத் தரணியை கிளி கொஞ்சும் சோலையாக்கி இருக்கிறது.

புதுப் புது அணைகளையும் தேக்கங்களையும, பொறுக்கு விதைப் பண்ணைகளையும், இரசாயன எருக்களையும், கால்நடைச் செல்வத்தையும் அவைகட்காகச் செயற்கை முறை உற்பத்தியையும், பெருமளவுக்குச் செய்ததுடன், சூல் கொண்ட மேகத்தை மழை முத்துக்களை ஈன்றளிக்கச் செய்வதற்கான குளிர்காற்றை அளித்திட எங்கும் 'வனமகோத்சவம' நடத்தியும், உற்பத்தியைப் பெருக்குங்கள் என்ற அறிவுரை அளித்தும், வளம் பெருகி வாழ்வு சிறப்படைய வேண்டும் என்ற நோக்கு பற்றி நேர்த்தியாகப் பேசிவரும், அமைச்சர் பெருமான் சென்ற கிழமை 'கல்லணை'யில் தங்கி இருந்திருக்கிறார்—அதுபோது, உணவு உற்பத்தி எதிர்பார்த்த அளவுக்குக் கிடைக்காததால் அக விலையும், அதனைச் சமாளிக்க வெளியிலிருந்து உணவுப் பொருள் தருவிக்க வேண்டுமென்ற நிலையும், மீண்டும் உணவுக் கட்டுப்பாடு புகுத்தப்படுமோ என்ற பீதியும் நாட்டிலே ஏற்பட்டு இருப்பது பற்றி எண்ணிப பார்த்திராமல் இருந்திருக்க முடியாது!

வந்த இடத்திலே காட்சி கண்டு களித்திடலாம், ஆட்சியிலே இருப்பதாலே ஏற்படும் பெருமை குறித்து மகிழலாம் என்று அமைச்சர் உளளூர எண்ணியிருந்தாலும்கூட, தம்பி கருணாநிதி அதையும் 'அனுபவிக்க' விடவில்லை.

உழுது பயிரிட்டு உழலும் மக்களை, நில முதலைகள படுத்துகிற பாடுபற்றிய, வேதனை தரும் செய்திகளை எடுத்துக்கொண்டு சென்று, "கனமே! கனமே! கல்லணையின் கவர்ச்சியிலும் அது காட்டும் தமிழரின் முன்னாள் மாட்சியிலும் ஈடுபட்டுள்ள கனமே! உழைக்கின்ற மக்களை, உருவில்லாமல் செய்துவிட, பிறர் உழைப்பால் கொழுத்திடும் போக்கினர் செய்திடும் கேடுகளைக் கேளீர்! ஏரடிக்கும் சிறு கோலின் துணையின்றி, மன்னன் கரம் தங்கும் செங்கோல் பயன் தராது என்பதனை, ஆன்றோர் கூறினர்—ஆனால் இன்றோ, மாளிகைவாசிகளின் பேச்சுதான் மந்திரிகள செவி புகும்! மாடோட்டும் ஏழையரின் பேச்சு அம்பலம் ஏறாது! சட்டம் நமக்காக என்று எண்ணிக களித்திடும் ஏரடிப்போர், ஏதறிவார், சந்து பொந்து கண்டறிவோம், சர்க்காரின் சட்டங்களில்! என்று இறுமாந்து கூறிவரும் இன்னின்னார் செயல் பாரீர்— என்று அடுக்கடுக்காகச் சேதிகளைக் கொண்டுபோய்க் கொடுத்திருக்கிறார். கல்லணையில் காட்சி காண வந்தோம்—'முள்ளணை' யல்லவா காண்கிறார், அமைச்சர் என்று அவர் தம் நண்பர் சிலர் எண்ணியிருந்து இருக்கக் கூடும்.

கல்லணையில் 'கனம்' அமைச்சர்! கல்லணையில் கருணாநிதி!— தம்பி! பார்த்தனையா, தமிழக-அரசியலில் ஏற்பட்டு வரும் புதுப்புது நிலைமைகளை.

கருணாநிதி கல்லணையும் செல்வார், மலரணைக்கும் செல்வார்— எதற்கு?—ஏதாவது கதை எழுதுவார்! வேறெதற்கு? என்று பேசிடுவோர் பலர் உண்டு. நீ அறிவாய். அவர்களேகூட, "இதேது! பயல்கள், உண்மையிலேயே, தொண்டாற்றுகிறார்கள் என்பது உலகுக்குத் தெரிந்துவிடும்போலிருக்கிறதே!" என்று கவலையுடன் பேசிக் கொள்வர், கை பிசைந்துகொள்வர்.

"நாடு பாதி நங்கவரம் பாதி!" என்றோர் பேச்சு, திருச்சி மாவட்டத்திலே உண்டு. நங்கவரம் பண்ணையின் அளவினையும் அந்தஸ்தினையும் விளக்கிட எழுந்தது, அப்பழமொழி. அந்தப் பண்ணையும் பிறவும் உள்ள குளித்தலை வட்டத்திலே, இன்று உழவர்களிடையே ஒரு பெரும் கொந்தளிப்பு. பட்டது போதும இனிப பயமில்லை—நமக்குப் பாதுகாப்பு தர சட்டம் வந்துள்ளது என்று அந்தச் சூதுவாதறியாத உழைப்பாளி மக்கள் உளம பூரித்து இருந்த வேளையில், "சட்டமா? வார்த்தைகளின கோர்வைதானே? இதோ

என் திறமையால், அதனைச் சல்லடைக் கண்ணாக்கி விடுகிறேன், பாருங்கள்" — என்று சீறிக்கூறி, பண்ணையின் பணப்பெட்டிக்குப் பாதுகாவலராகிவிட்டனர் சிலர். அவர்களால் விளைந்துள்ள வேதனையைத் தாங்கிக்கொள்ள முடியாமல், உழவர் பெருமக்கள் கிளர்ச்சியில் ஈடுபடவும் பக்குவமாகிவிட்டனர்.

வயலோரங்களிலே, இரும்புத் தொப்பி அணிந்த போலீசார்!

உழவர் வாழ் பகுதிகளில், உருட்டல் மிரட்டல் ஏராளம்!

இந்த நிலைமையை எடுத்துக்காட்டி, உழவர்களுக்கு நீதி வழங்கும்படி, அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் பணியிலே கருணாநிதி ஈடுபட்டது, எனக்குப் பூரிப்பும் பெருமையும் தருவதாக இருக்கிறது; உனக்கும் உவகை கொஞ்சமாகவா இருக்கும்!

அமைச்சரை, வேறு எந்த இடத்திலாவது, கருணாநிதி சந்தித்துப் பேசியிருந்தால் கூட, கல்லணையில் பெற்றிருக்கக்கூடிய எழுச்சியைப் பெற்றிருக்க முடியாதென்று நான் எண்ணுகிறேன் —கல்லணையே, தமிழ் ஆட்சி முறையின் மாண்பு விளக்கமாக அல்லவா இருக்கிறது! கல்லானாலும், அது தரக்கூடிய கருத்து, மதிப்பு மிக்கதாக அல்லவா இருந்திருக்கும்!

உழவர் உழைத்துவிட்டு புழுப்போலத் துடிப்பர்; பண்ணை முதலாளிகள் பாடுபடுவோரைஉருட்டி மிரட்டி வேலை வாங்கி, அவர்கள் வயிற்றிலடித்துக் கொழுத்து நிற்பார்கள்—என்று அன்று கல்லணை கட்டிய காவலன் எண்ணியிருந்திருக்க முடியுமா? அவன் கண்ட தமிழகத்தில், உழைப்பவன் உயர்ந்தான், உலுத்தன் ஊராளவில்லை!! அந்த மன்னன் கண்ட தமிழகம், உணவுக்காக பிற நாடுகளிடம் கையேந்தி நின்றிருக்கவில்லை. திறமை அத்தனையும் திட்டம் தீட்டுவதில், விளைவு அத்தனையும் வறுமைதான் என்று உள்ள இன்றைய நிலைமையா, அன்று? அல்ல! அல்ல! தம்பி! இயற்கை இன்ப வாழ்வுக்கான வழி காட்டிற்று! உழைப்பு அதனை உருவாக்கித்தந்தது. ஊராள்வோர், அந்த உருவு குலையாமல், பார்த்துக்கொண்டனர்.

முறை தவறி மன்னன் நடந்தாலும், வரி அதிகம் கரந்தாலும், கவிபாடிக் களித்திடும் புலவர்களும், கடுமொழி கூறிடவும், காவலனைத் திருத்திடவும், தயங்காத காலம் அது.

இன்று உள்ள நிலையோ, உள்ள கேடுபாடுகளை நீக்கிட வழி அறியாததை மூடி மறைத்துக் கொண்டு, கேடுபாடு நீங்க வேண்டும் என்ற நோக்குடன் எவரேனும் உண்மையை எடுத்துக் கூறினால், மெத்தக் கோபங்கொண்டு, "ஏதறிவான் இச் சிறுவன்! எமதன்றோ இன்று அரசு?" என்று எக்களிப்புடன் பேசுகின்ற காலம்.

இருப்பினும், தம்பி, உன் சார்பிலே சட்டசபையிலே நாங்கள், நாட்டிலே காணப்படும் குறைபாடுகளை எடுத்துக் காட்டி வருகிறோம்; ஆட்சிப் பொறுப்பிலே உள்ள அமைச்சர்களுக்குக் கூட அத்துணை கசப்பாக இல்லை, இடையில் நின்று இனிப்புப் பெறுவோருக்குத்தான் ஒரே எரிச்சல்!! ஏதேதோ பேசுகின்றனர்.

"உங்கள் தீனா மூனா கழகத்துக்காரர்கள், சட்டசபையிலே வந்து என்ன சாதித்துவிட்டார்கள்? திணறுகிறார்கள்! சட்டசபையிலே எங்கள் மந்திரிகள் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் கூற முடியாமல், திண்டாடித் தவிக்கிறார்கள்" என்று ஒரு திருவாளர் பேசியதாகக் கூடப் பத்திரிகையில் பார்த்தேன்.

தம்பி! அந்தத் திருவாளரை நீயோ நானோ சந்திக்கமுடியாது— ஆனால் அவருடைய நண்பர்கள் எவரேனும் எடுத்துக் கூறட்டும் என்ற எண்ணத்தால் இதைக் கூறுகிறேன்.

சட்டசபையில், மந்திரிகள் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் கூற முடியாமல், நாங்கள் திண்டாடிப் போகிறோம் என்றல்லவா கூறுகிறார் அந்தத் திருவாளர்—அவர் எத்துணைத் தெளிவில்லாதவர் என்பதைக் கவனி.

சட்டசபையில் மந்திரிகள், உறுப்பினர்களைப் பார்த்துக் கேள்வி கேட்பதில்லை—முறை அது அல்ல!

மந்திரிகளைப் பார்த்து உறுப்பினர்கள் கேள்வி கேட்பார்கள் —அதுதான் அங்கு உள்ள முறை!

இதனைக் கேட்டாகிலும்தெரிந்து கொண்டு பேசாமல், அந்தப் பேச்சாளி, மந்திரிகள் எங்களைப் பார்த்து கேள்வி கேட்பதாகவும், நாங்கள் என்ன பதில் அளிப்பது என்று தெரியாமல் திணறுகிறோம் என்றும் 'உளறுகிறார்' என்று கூறத் தோன்றுகிறது— பாபம் போகட்டும் — பேசுகிறார் என்றே கூறுகிறேன்.

கேள்வி—பதில் என்ற பிரச்சினையை நான் இதுபோது இங்கு எழுப்பியது, சட்டசபை நடவடிக்கை குறித்துக் கூற அல்ல.

கல்லணை எழுப்பும் கேள்வியும் 'கனம்' அமைச்சர் அளிக்கக்கூடிய பதிலும், எப்படி இருந்திருக்கும் என்பதை எண்ணியே அந்தப் பிரச்சினையை எடுத்தேன்.

"மன்னர் மன்னவா! பிடிபட்ட சிங்களவர்கள் பல ஆயிரம் இருக்கும். அவர்களை என்ன

4-ம் பக்கம் தொடர்ச்சி

அல்லி திருமணம்

அன்று திருமண நாள். தென்றலாள் சுறு சுறுப்பாக பல பணிகள் புரிந்தாள், தன் அண்ணன் புயலை ஓர் இடத்தில் அமைதியாக அமர வைத்துவிட்டு. முகில் மாமன் மனத்தில் கருப்பு வைத்ததினால் கருமுகிலாகக் காட்சி அளித்தான். தன் பெண், மழையைப் பக்கலில் நிறுத்திக்கொண்டு, ஓர் மூலையில் நின்றிருந்தான். புயலான் இருப்பதைக் கண்டதும் அச்சமும் கோபமும் மனத்தில் எழ நின்றிருந்தான். ஆனால் அவனது இரண்டாவது பெண் மின்னல் கொடியாள், தந்தையைப்போல் பொறுமைகொள்ளாது, தந்தையின் கட்டளையை மீறிவந்து பார்த்துவிட்டுச் சென்றாள்.

மணநேரம் அது, சந்திரன் தண்ணீர்த் தேரில் இறங்கிவந்து அல்லியின் அருகில் அமர்ந்தான்.

மலர்கள் இதழ்விரித்து மணம் பரப்பின!

புள்ளினங்கள் 'லாலி' பாடின.

மரங்கள் மலர்களைச் சொரிந்து 'நீடு வாழ்க' என வாழ்த்தின.

மணம் இனிது முடிந்தது. அவர்கள் இருவரும் இன்பமாக வாழட்டும்!

★

செய்வது?" என்று அமைச்சர் கேட்டிட, "ஆயிரம் அடி நீளம், அறுபது அடி அகலம், இருபது அடி ஆழம் கொண்டதாக ஒரு அணை கட்டுவதற்கு எவ்வளவு ஆட்கள் தேவைப்படும்?—என்று கரிகாற் சோழன், அமைச்சரின் கேள்விக்கு, மற்றோர் கேள்வி வடிவிலேயே பதிலளித்திருப்பான். அமைச்சரும், பொருளை அறிந்து கொண்டு, "அரசே! அறிந்தேன்! சிங்களப் போரிலே நம்மிடம் சிக்கினோரைக் கொண்டே அணை கட்டி முடிக்க ஏற்பாடுகளைத் துவக்குகிறேன்" என்று கூறி இருந்திருப்பான்.

இன்று அமைச்சர்களை நாடு கேட்கும் கேள்விகள், தம்பி! உனக்கும் எனக்கும்தான், நன்றாகத் தெரியுமே!

ஜாதி பேதத்தையும் அதனை நிலைத்திருக்கச் செய்திடும் முறைகளையும், ஏற்பாடுகளையும் ஏன் மாற்றி அமைக்கக் கூடாது? —என்று பெரியார் கேட்கிறார்— அதற்காக ஆகஸ்ட்டுக்கு ஆகஸ்ட்டு ஒரு அறப்போரும் தொடுக்கிறார்.

'வேலை கொடு!
அல்லது சோறு போடு!
சமதர்மம் மலரச் செய்திடு!
தமிழ் நாடு என்ற பெயரிடு!
இவைகளைக்கூடச் செய்யாது, மக்கள் ஆட்சி என்று பெயர் மட்டும் சுமந்து கொண்டிருக்கலாமா?'

என்ற கேள்விக் கணைகளைத் தொடுத்தபடி, சோஷியலிஸ்டுகளும், ஆகஸ்ட் கிளர்ச்சி நடத்துகிறார்கள்.

நாட்டின் நாடி நரம்பு நாங்கள்!
நாங்கள் பலமற்று இருப்பது நாட்டுக்கு நல்லது அல்ல;
எங்கள் ஊதியத்தை உயர்த்துங்கள்.
துயர் தீர்க்க வழி காணலாகாதா?

என்று கேட்டு, தபால்-தந்தி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்துவிட்டனர்.

இவைகளுக்கெல்லாம் துரைத்தனம், ஒரு கேள்வி மூலமாகவே பதில் அளிக்கின்றது.

"எங்களுக்குத்தானே, 'ஓட்டு' போட்டீர்கள்?"

என்பதுதான் காங்கிரஸ் துரைத்தனம், கேள்வி வடிவிலே தரும் பதில்!

விரைவில் ஆரம்பமாகும்
தோழர் இராதாமணாளன் தீட்டியது
"பாண்டியன் திருமேனி"
உள்ளம் தொடும் தொடர் கதை!

கல்லணையில் கேட்கும் கலகல வெனும் ஒலி, இன்றைய ஆட்சியின் போக்கு கண்டு, காவிரிப் பெண்ணாள் எழுப்பிடும் நகையொலியோ! இருக்கலாம்!!

தம்பி! இதோ வேறோர் ஒலி, என் செவிக்கு.

"மணி ஐந்து! சென்னையில் கூட்டம்" என்கிறார் நண்பர்.

கிளம்புகிறேன்! அடுத்த கிழமை, பிறவற்றினைக் குறித்துப் பேசுவோம்; அதற்குள் முதலமைச்சர் காமராசர் அவர்கள் என் தொகுதியின் நிலைமைகளைக் காண்பார், இங்கு கல்லணையும் இல்லை, மலரணையும் கிடையாது; கள்ளியும் காளானும் அதிகம்! இப்போது, முதலமைச்சர் வருவதற்கே, வழி அமைக்கிறார்களாம்! அப்படிப்பட்ட 'கிராமம்' மிகுந்த தொகுதி. அங்கு, உள்ள நிலைமைகளை முதலமைச்சர் காண இருக்கிறார், கண்டதன் விளைவு என்ன என்பதனையும் அடுத்த கிழமை கூறுகிறேன்.

ஒன்று, இப்போதே விளங்கும்— விளக்கம் காண அஞ்சாதாருக்கு —என்று நம்புகிறேன்.

கல்லணையில் கருணாநிதி அமைச்சர் பக்தவத்சலத்தைக் கண்டு பேசுவதும்,

சத்யவாணிமுத்து, அமைச்சர் லூர்து அம்மையாரை, தமது தொகுதியின் அலங்கோலத்தை வந்து பார்த்திடச் செய்ததும்,

நான், எங்கள் தொகுதி நிலைமையை முதலமைச்சர் காண ஏற்பாடு செய்வதும்,

இவைகள் யாவும், நமது கழகம், மக்கள் சார்பில், ஏழை எளியோர் சார்பில் நின்று பாடுபட முனைந்துள்ள ஒரு புதிய 'ஜனநாயக சக்தி' என்பதை எடுத்துக்காட்டும், நிகழ்ச்சிகள்.

கல்லணை கட்டி தமிழரின் கீர்த்தியை நிலை நாட்டினான் மன்னன், இன்றோ மக்கள், உழைத்து உருக்குலைந்து கிடக்கிறார்கள்; ஊராள்வோருக்கு இந்த உண்மையினை எடுத்துக்கூறி, இயன்ற அளவு இதம் தேடித்தரும் கடமை நமக்கு உண்டு அல்லவா? அந்தக் கடமையில் களிப்புடன், தம்பி! நாம் அனைவரும் ஈடுபட்டிருக்கிறோம். நாம் வாழ்ந்த இனம் கீர்த்தி மிக்கது என்பதனை எடுத்துக்காட்ட கல்லணையும் இருக்கிறது, நாம் தாழ்ந்து கிடக்கிறோம் என்பதனை எடுத்துக் காட்ட, "கண்காணாச் சீமையிலே தமிழர் கசிந்துருகிக் கிடக்கும் காட்சியும்" இருக்கிறது. ஆனால், எத்துணைதான் தாழ்ந்து கிடப்பினும், ஓரளவு ஒற்றுமையும், எழுச்சியும் பெற்றால், குறிப்பிடத்தக்க வெற்றியும் தமிழருக்குக் கிட்டுகிறது என்பதனை, இதுபோது இலங்கைவாழ் தமிழர்கள் பெற்றுள்ள வெற்றி நமக்கு நினைவூட்டுகிறது.

'ஆகஸ்ட்டு' இல்லாமலே நமதரும் தோழர்கள் அங்கு வெற்றி பெற்றனர்—தம்பி!

நாமும் ஒன்றுபட்டுப் பணியாற்றினால், பலன் கிடைக்காமலா போகும்!

தமிழன் திட்டமிட்டால் காரியத்தை முடிக்கவல்லவன் என்பதைக் காட்டி நிற்கிறதே 'கல்லணை'—கண்டிருக்கிறாயா, தம்பி! இன்னும் இல்லையென்றால், காணத் தவறாதே — கல்லணை தமிழரின் ஆற்றலை விளக்கிடும் அரிய சின்னம்!!

அண்ணன்,

அண்ணாதுரை